விலை ரூபா: 20.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள் : இருபது

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 06 வெள்ளிக்கிழமை (21.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு அநீதியான முறையில் சிறை!

## கனடா மீண்டும் கண்டித்து அறிக்கை

(ஒன்ராரியோ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அநீதியான முறையில் தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பதைக் கண்டித்து கனடா, ஸ்காபரோ கிழக்கு, பிக்கரிங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கோர்னேலியு சிசு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோர், பீடாதிபதிகளுடன் இராணுவத்தினர் இன்று சந்திப்பு

### பல்கலை மாணவர்களின் விடுதலை தொடர்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இராணுவத்தினருக்குமிடையிலான சந்திப்பு இன்று திட்டமிட்டபடி காலை 10 மணியளவில் பலாலி படை தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.'

இச் சந்திப்பில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம், தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்கள், பீடாதிபதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனினும் இந்தச் சந்திப்பில் தாம் கலந்துகொள்வது குறித்து எவ்வித முடிபும் எடுக்கப்படவில்லையென (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா முழு ஆதரவு

### ஜனாதிபதியிடம் ஜெனரல் சிங் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியாவினால் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று உறுதியளித்தார்.

5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் தலைமையிலான குழுவினர், நேற்று ஜனாபதி மகிந்த ராஜபக்ஷ (19ஆம் பக்கம் பார்க்க)



## வைத்திய நிபுணருக்கு வாள் வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் ஒருவர் இனந் தெரியாதவர்களின் வாள் வெட்டிற்கு இலக்காகியுள்ளார்.

யாழ்.போதனாவின் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணரான (ஈ.என்.ரி) திருமாறன் (வயது-44) என்பவரே மேற்படி வாள்வெட்டிற்கு இலக் (19ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலைக்கு 23 பேர் வரை பலி!

### 68 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளதுடன் 16 பேர் காணாமல் போயுள்ளனர். சீரற்ற காலநிலையால் 68ஆயிரத்து 904 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் மழை நின்றுள்ள போதிலும் பல பகுதிகள் இன்னமும் வெள்ளத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தூதுவர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள 6 நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள், தங்களுடைய நியமனக்கடிதங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில், பெலாரஸ் குடியரசின் இலங்கைக்கான புதிய தூதுவராக விட்டலி ஏ.பிரிமா, அயர்லாந்தின் இலங்கைக்கான தூதுவராக பெய்லிம் மெக்லாக்லின், சுவீ (19ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவிற்கு இடைக்காலத் தடையா?

### இன்று தீர்ப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் தெரிவுக்குழுவிற்கு இடைக்காலத் தடை விதிப்பது குறித்து தீர்ப்பு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவை இரத்துச் செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராசா தலைமையிலான மூவர் அடங்கிய நீதிபதி (19ஆம் பக்கம் பார்க்க)

## 21ஆம் திகதி பூதம் இன்றுடன் அழிவடையும்

உலகத்தில் பலரை கிலிகொள்ள வைத்த அந்தநாள் இன்று உங்களைத் தாண்டிக்கொண்டிருக்கின்றது.

உலகத்தின் அழிவு 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி நிகழவிருக்கின்றது என மாயன் நாள்காட்டி உட்பட உலகின் பல ஊடகங்கள் மற்றும் மதத்தலைவர்கள் கூறிவந்தபோதும் இதில் எவ்வித உண்மையும் கிடையாது என புவியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலக அழிவு என்ற இந்த விடயத்தை வைத்துக்கொண்டு ஒரு சிலர் (02ஆம் பக்கம் பார்க்க)

## மின்தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைமையை மீட்க அமெரிக்கா விமானம் அனுப்பியது!

(கொழும்பு)

போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பான களநிலவரங்களை மதிப்பிடுவதற்கு அமெரிக்க படை அதிகாரிகளின் [illegible] குழுவொன்று சிறப்பு விமானத்தில் இரகசியமாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றில் இராணுவ ஆய்வாளர் சாமிந்ர பெர்ணாண்டோ எழுதியுள்ள பத்தியொன்றில் இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

ஒரு கட்டத்தில் இலங்கை அரசுடன் கலந்தாலோசித்து, விடுதலைப் புலிகளின் தலைவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் வெளியேற்றுவதற்கு தனது வளங்களைப் பயன்படுத்துவது குறித்து அமெரிக்கா (19ஆம் பக்கம் பார்க்க)

## 5 கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டம்

### யாழ்ப்பாணத்தில் இன்று த.தே.கூட்டமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவுள்ள அடையாள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் அனைவரும் வருகை தந்து ஆதரவு கொடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவைசேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் துணை பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பிரபல கர்நாடக இசைப் பாடகி

# நித்யஸ்ரீயின் கணவர் தற்கொலை; நித்யஸ்ரீயும் தற்கொலை முயற்சி?



(சென்னை)

பிரபல பாடகி நித்யஸ்ரீயின் கணவர் மகாதேவன் சென்னை கோட்டூர்புரம் அருகே உள்ள அடையாறு ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அவரது உடலை தீயணைப்புப் படையினர் மீட்டுள்ளனர். பிரேத பரிசோதனைக்காக அவரது உடல் ராயப்பேட்டை அரச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நேற்றுப் பகல் 12.45 மணியளவில் தனது காரில் வந்து கோட்டூர்புரம அருகே உள்ள அடையாற்றின் பாலத்தில் நிறுத்தி விட்டு, ஆற்றில் அவர் குதித்துள்ளார்.

திடீரென ஒருவர் காரை நிறுத்திவிட்டு ஆற்றில் குதித்ததைப் பார்த்தவர்கள், இது குறித்து காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு படையினர் , ஆற்றில் குதித்து சுமார் ஒரு மணி நேர தேடுதலுக்குப் பின்னர் அவரது உடலை மீட்டனர்.

நேற்றுக் காலை ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாகவே மகாதேவன், கோபத்துடன் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

**நித்யஸ்ரீயும் தற்கொலை முயற்சி**

இதனிடையே கணவர் இறந்த தகவலறிந்த பாடகி நித்யஸ்ரீயும், தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றதாக தகவல் வெளியாகியுள்ளது. அவரது உடல் நிலை குறித்து விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

பாடகி நித்யஸ்ரீ, மறைந்த பிரபல கர்நாடக பாடகி பட்டம்மாளின் பேர்த்தி ஆவார்.

நித்யஸ்ரீயும் தற்கொலைக்கு முயற்சித்ததால் முழு இசையுலகமே அதிர்ச்சியில் மூழ்கியுள்ளது.

நித்யஸ்ரீயின் இசைக்கு மயங்காதவர்களே இல்லை என்று கூறுமளவிற்கு பெருந்திரளான ரசிகர்களை இவர் சம்பாதித்துள்ளார்.

இவரது இசைக்கச்சேரி யாழ்ப்பாணத்திலும் அண்மையில் நிகழ்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-1)



## பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல்

(குருமன்காடு)

வவுனியா நகரசபை பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகர சபையின் உப தலைவர் தலைமையில் வவு னியா நகர சபை மண்டபத்தில் நடைபெ றவுள்ளது.

வவுனியா நகர சபையின் நடவடிக்கைகளில் 7 விடயங்கள் தொடர்பாக பொது அமைப்புகள் விளக்கம் கோரி இருந்தன.

இதனை விளக்கும் முகமாக இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் அனைத்து உறுப்பினர்களையும் பொது அமைப்புகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளனர். (ந-9,250)

## அழைக்கப்பட்ட மாணவிகள் விசாரணைக்கு பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் (ரிஐடி) வவுனியாவிற்கு அழைக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவிகள் இருவரும் விசாரணையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

கடந்த மாதம் 27ஆம் திகதியன்று பெண்கள் விடுதியில் மாவீரர் நினைவுச் சுடர் ஏற்றியமை தொடர்பில் குமாரசாமி விடுதியில் தங்கியிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவிகள் இருவரே இவ்வாறு விசாரணைக்காக நேற்றைய தினம் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் வவுனியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாப மாணவிகள் இருவரும் விசாரணையின் பின்னர் நேற்றைய தினம் பிற்பகலே விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

மேலும் இதுவரையில் 4 மாணவிகள் இவ்வாறு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு 10 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டும், சிலர் தடுப்பில் வைக்கப்பட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## படைத்தரப்பின் பிரசன்னம் மக்களைப் பாதுகாக்கவே!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவமும் ஏனைய படைகளும் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வட மாகாணத்தைச் சேர்ந்த டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது எமது அரசாங்கம். இராணுவமும் ஏனைய படைகளும் இந்த அரசாங்கத்தின் படைகள். அவர்கள் மக்களின் பாதுகாப்பிற்காகவே இங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமன்றி இராணுவமும் ஏனைய படைகளும் மக்கள் நலன் சேர்ந்த செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றன.

ஆனால் அண்மைக்காலமாக இங்குள்ள பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகள் மக்களைப் பயப்பீதியில் ஆழ்த்தும் வகையில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நான் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றேன். இந்த அரசாங்கம் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை நான் முன்வைக்கும் போது அதை நிராகரித்ததில்லை.

எனவே தவறான வழிநடத்தல்களுக்கு இடமளிக்காதீர்கள். இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு இல்லாதவற்றைப் பெற முயற்சிக்க வேண்டும். நல்லெண்ணங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். சுயலாப அரசியலுக்கு இடமளிக்காதீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## அரசியலில் ஈடுபட ஷிராணியை பொன்சேகா அழைப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை அரசியலில் ஈடுபட வருமாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதம நீதியரசர் அரசியலில் ஈடுபட முன்வந்தால் அவருக்கு உதவி செய்யத்தான் எப்போதும் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலில் ஈடுபட்டதையிட்டு கவலையடையவில்லை எனவும்தான் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்ததாகவே கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தனது தேர்தல் வெற்றியை யாரோ ஒருவர் தட்டிப் பறித்ததாகவே இப்போதும் நம்புவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (ந-11)

## விபத்தொன்றில் இளைஞன் காயம்!

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் மனோசிங்கம் சுரேன் என்ற இளைஞரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே மோட்டார் சைக்கிளில் பயணித்த மேற்படி இளைஞர் காயமடைய நேரிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8)

## 21ஆம் திகதி...

பணம் சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே வீண் வதந்திகளுக்கு துணை போகாதீர்கள் என பிரிட்டனின் த கார்டியன் பத்திரிகை மக்களை எச்சரித்துள்ளது.

தோற்றம் ஒன்று உண்டானால் முடிபு ஒன்று உண்டென்பதைப் போல உலகம் ஒருநாள் அழிவடையலாம். ஆனால் இந்நாளில் உலகம் முற்றுமுழுதாக அழிவடைய எவ்வித வாய்ப்புக்களும் இல்லை என புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் வானிலிருந்து கல் விழுதல், சிவப்பு மழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, எரிமலை வெடிப்பு, திடீர் பள்ளம் உருவாதல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் சாதாரணமாக உலகில் எப்போதும் நிகழ்ந்துவருபவையே எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எது எப்படியாயினும் இன்றையதினம் உலகம் அழிவடைவதற்கான சந்தர்ப்பம் நிச்சயம் இல்லை என்பதே நிறுத்திட்டமான விஞ்ஞானத்தின் உண்மையாகும்.

21-ம் திகதி பிரளயம், உலக அழிவு என உலகில் கொக்கரித்த பூதங்கள் பல, நாளை 22-ம் திகதி விடியலில் மௌனித்து அழிந்து போனால் உலக மக்களின் அமைதிக்கு அது நிம்மதியான பெருமூச்சாகும். (ந-1)







ஈழத்து சிதம்பரத்தில்

திருவெம்பாவை காண வாரீர்...

உலகத்தை இயக்கும் ஒப்பற்ற தலைவன் எங்கள் சிவன்

ஐந்து பெரும் பூதங்களால் அமைந்த பல அண்டங்கள்
எந்தக் கணத்தினிலும் இயங்கிச் சுழலுவரை
சுழலாமல் ஒருகணம்தான் சும்மா இருந்துவிடில்
அழிவுற்றுத் துகள்கோடி யாகிச் சிதறிவிடும்
வானப் பெருவெளியில் வட்டமிடும் அண்டமெலாம்
ஊனமின்றிச் சுற்றிவர ஒருவன் இயக்குகிறான்
அந்த ஒருவன்தான் அருளிறைவன் நம் தலைவன்
சிந்தையதற் கெட்டாத புதிராய்த் திகழும் எங்கள் சிவன்.

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

( 21-12-2012 இன்று வெள்ளிக்கிழமை 3-ம் திருவெம்பாவை உற்சவம் )

3-ம் ஆண்டு நினைவலைகள்

விஜயகுமார் சர்வேஸ்வரி (ஆவரங்கால்)

(21.12.2012)




ஒளியாகி எம் விழியாகி

மூச்சாகி நின்ற எம் அம்மாவே

அழியாத அன்புடன் எம்மை

காத்த அம்மாவே

எங்குதான் சென்றீரோ

அன்புடன்

மகள் - ஜர்த்திகா ராஜராஜன்

மகன் -வி.ஜதீபன்

பேர்த்தி -அக்ஷிரா

ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(அ-1830)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்ல நீதிபதி

ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம்மாஸ். அவர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடம் இருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை.

"எனக்கு ஊதியம் வேண்டாம்" என்று அவர் கூறிவிட்டார். அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்?

இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று அதில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் வீட்டில் இருப்பவர்களே கவனித்துக் கொண்டார்கள்.

அவர் மக்கள் எந்நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார்; மக்களுக்கு அவர் மீது அதிக மரியாதை இருந்தது.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் பண முடிச் சொன்றை வழங்க முன்வந்தார். ஆனால், அதை வாங்க அவர் மறுத்துவிட்டார்.

"நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள். அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே, அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்கள்" என்று முதல்வர் கூறினார்.

ஆனால், அதற்கு நீதிபதி மசியாமல் "நான் மக்களுக்குப் பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

"சரி... இதற்கும் மேலே இவரை வற்புறுத்தினால், இப் பதவியிலிருந்து விலகினாலும் விலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்து விடக்கூடாது" என்று நினைத்து முதல்வர் பேசாமல் இருந்து விட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவைகளை புல்வெளியில் மேயவிட்டு விட்டு, அமர்ந்திருப்பதற்கு தனது நண்பன் ஒருவனுடைய வீட்டை அண்டி ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தார்.

ஆனால், அதற்கு நண்பன் ஒப்புக் கொள்ளவில்லை. "இது நடைபாதை... இதில் குடிசை கட்ட முடியாது" என்று அவன் தடுத்தான்.

அதனால் இருவருக்கும் இடையில் தகராறு மூண்டது. "சரி... இதற்கும் மேலேயும் நமக்குள் வம்பு வேண்டாம்; பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்" என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இருவரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார் என்று அவர்களுக்குத் தெரியாது. நீதிமன்றத்தை நோக்கி நடந்த வேளையில் எதிரில் ஒருவர் தண்ணீர் குடத்துடன் வந்து கொண்டிருந்தார்.

அவரிடம் இவர்கள் இருவரும் "இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்?" என்று வினவினார்கள்.

"நான்தான் நீதிபதி... உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்" என்றார்.

"எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால், நீங்களே தண்ணீர் குடமும் கையுமாக இருக்காதீர்கள். அதை சற்று கீழே இறக்கி வையுங்கள். அதன் பின் நிதானமாக நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்" என்று இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி;

"இது மக்கள் நடந்து போகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து... இந்த வழியாகப் போகும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பவில்லை. ஆதலால் இக்குடம் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்" என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும், "சரி, ஐயா... நாங்கள் போய் வருகிறோம்" என்று கூறியபடியே புறப்பட்டார்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# புதிய பயிலுநர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் அரசாங்க வேலைகளுக்கான நேர்முகத் தேர்வில் எதிர்பார்க்கப்படும் 720 மணித்தியாலங்களைக் கொண்ட தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக வீரசிங்கம் மண்டப மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொழிநுட்பத்தில் தேசிய டிப்ளோமா (NDICT)- ஒரு வருடம், தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் (NCICT)-6 மாதம் கணனி வன்பொருள் (NVQ-3) -6 மாதம் ஆகிய கற்கை நெறிகளும் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மின் தொழில்நுட்ப வினைஞர் (NVQ-III)-6 மாதம், உத்துருளி திருத்துகை (NVQ III)-6 மாதம், கட்டட நிர்மாணம் (NVQ III)-6 மாதம், ஆடை வடிவமைப்பாளர் (NVQ IV)-6 மாதம் ஆகிய கற்கை நெறிகளும் நடத்தப்படவுள்ளன.

சண்டிலிப்பாய், பிரான்பற்று தொழிற்பயிற்சி நிலையத்தில் மின் தொழில்நுட்ப வினைஞர் (NVQ III)-6 மாதம், முக அழகியல் (NVQ III)-3 மாதம், சிகை அலங்காரம் (NVQ III)-3 மாதம் ஆகிய கற்றை நெறிகளும் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்சாலை மின்னியல் வல்லுநர் (NVQ IV)-1வருடம் கனரக வாகன திருத்துநர் (NVQ IV)-1வருடம், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (NVQ IV)-6 மாதம், காய்ச்சி இணைத்தல் (NVQ III)- 6 மாதம் ஆகிய கற்கைநெறிகளும் வடமராட்சி பருத்தித்துறையில் குளிரூட்டலும் வளிசீராக்கலும் (NVQ IV)-1 வருடம் கரவெட்டியில் அலுமினியக் கட்டுமானம் (NVQ III)-6 மாத கற்கைநெறிகளும் தீவகத்தில் ஊர்காவற்றுறையில் வெளியிணைப்பு இயந்திரதிருத்தம் (NVQ III)-6 மாத கற்கை நெறி ஆகியனவே நடைபெறவுள்ளன.

தேசிய சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கற்கை நெறிகளில் இணையவிரும்புவோர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரிலோ தபால்மூலமோ தமது விபரக் கோவையை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். (அ-9)

## 10 ஆவது ஆண்டு நிறைவும் கௌரவிப்பு விழாவும்

யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்பீடத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வங்கி மற்றும் நிதி பரீட்சையை முடித்துக் கொண்டவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மண்டபத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி இயக்குநர் வணபிதா வைத்திய கலாநிதி எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வடமாகாண முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் ஏ.விமலேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 85 | 100-110 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 350 | 250 |
| தக்காளி | 100 | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 50 | 50 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 140 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 130 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 130 | 120 |
| பீற்றூட் | -- | 100 | 140 | 120 |
| கறிமிளகாய் | -- | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 60-70 | 60 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 70 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 300 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 38 | 30-35 |
| இராசவள்ளி | 50 | 120 | 160 | -- |

## இராசி பலன்

*21.12.2012*
*(மார்கழி 06, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு*
*நவமி பின்னிரவு 5.13 மணிவரை*
*உத்தரட்டாதி பிற்பகல் 2.48 மணிவரை*
*இராகுகாலம் 10.55-12.25 மணிவரை*
*சுபநேரம் 6.25-7.55 மணிவரை*
*சித்தாமிர்தம்.*

**மேடம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**இடபம்** மன மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயர்வடையும், புகழ் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தொட்ட காரியம் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், பயணங்களால் பலனுண்டு, உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** விரயங்கள் தவிர்க்க இயலாமல் ஏற்படும், குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை, போசன நன்மையுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**துலாம்** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பழைய பாக்கியை நாசூக்காகப் பேசி வசூலிப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் திட்டமிட்டபடியே கைகூடும், பெற்றோர் மீது பிரியம் கூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பொருளாதார நிலை திருப்தி தரும், விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும்.

**மீனம்** வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கற்பனைகள் அதிகரிக்கும், போசன நன்மையுண்டு, நண்பர்கள் உதவியுண்டு.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் வீதியில் திருடன் நையப்புடைப்பு

## இளைஞர்களும் கவனிப்பு

(யாழ்ப்பாணம்)

பூட்டியிருந்த வீட்டிற்குள் உள்நுழைந்து திருட முயன்ற நபர் இளைஞர்களின் கவனிப்புடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இத்திருட்டு சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் மானிப்பாய் வீதி கோம்பயன் மணல் மயானத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த திருட்டு நபர் தனித்த இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டிற்குள் புகுந்து அங்கு எதுவும் இல்லாமையினால் அங்கிருந்த வர்ண பூச்சுக்கலவைகளை திருட முயன்றுள்ளார். எனினும் அப்பகுதியால் போய் வந்தவர்களின் கண்ணில் இத்திருட்டு முயற்சி தென்படவே இத்திருடனை பிடிக்கச் சென்றுள்ளனர். எனினும் பிடிக்கச் சென்வரை திருடன் தாக்கியுள்ளான். மேலும் இருவரின் துணையுடன் திருடனை பிடித்து அவ் வீதியிலுள்ள மின்கம்பத்தில் கட்டி உரிய மரியாதை அவ்வழியால் போய் வந்த அனைவரினாலும் வழங்கப்பட்டது. பின்னர் இளைஞர்கள் வழங்கிய மரியாதை உச்சகட்ட அளவிற்கு சென்றுவிட்டதனால் திருடன் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான் என்றும் இத்திருட்டில் மேலும் ஒருவரும் ஈடுபட்டு இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)






# வடக்கு முன்பள்ளிகளின் அபிவிருத்தி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

**கல்வியே எமது பெறுமதிமிக்க மூலதனம். அவ்வாறான கல்விச் செயற்பாடுகளின் ஆரம்ப நிலையாகவும் மிகவும் முக்கியமானதாகவும் விளங்கும் முன்பள்ளிச் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை வளமிக்கதாக வளர்த்தெடுத்தல் அவசியமானது என வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.**







ஆறுதல் நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்றுக்காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆறுதல் நிறுவனத்தின் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்தைச்சேர்ந்த 447 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் டிப்ளோமா கற்கைநெறியைப்பூர்த்தி செய்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செயலாளர் மேலும் தெரிவிக்கையில், கல்வியறிவும் ஒழுக்கமும் சமூகப் பொறுப்புமுடைய சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நற்பண்புடைய சமூகமாக முன்பள்ளிச் சிறார்களை உருவாக்கும் நோக்குடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த டிப்ளோமா கற்கைநெறி வழங்கப்பட்டது.

கல்விதான் எமது பெறுமதிமிக்க மூலதனம். அத்தகைய மூலதனத்தைக் கட்டிக் காக்கக்கூடியவர்கள் மாணவர்கள். அவர்கள் தான் எமது எதிர்காலச்சொத்து.

ஒரு கட்டடத்திற்கு அத்திபாரம் எவ்வாறு முக்கியமோ அதேபோன்று கல்விச் செயற்பாடுகளுக்கு முன்பள்ளிகள் முக்கியமாக விளங்குகின்றன. முன்பள்ளிச் சிறார்களை ஆற்றலும் அறிவும் உடையவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும் என்றால் அவர்களுக்கு அவற்றை வழங்கும் ஆசிரியர்கள் தகுதியுடையவர்களாக இருக்கவேண்டும். வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த காலத்தில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. எதிர்காலத்திலும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும் எந்தவொரு மாகாணத்திலும் இல்லாத நடைமுறை இந்த முன்பள்ளி செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக வடக்கு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக்கொடுப்பனவு வழங்கும் திட்டம். இந்தத் திட்டம் வடமாகாணத்தை தவிர்ந்த வேறு எந்த மாகாணத்திலும் இல்லை.

எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்பெறச் செய்யும் நோக்குடன் தற்போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுகிறது.

எதிர்காலத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்படும் சவால்களை சமாளிக்க கூடியவர்களாக ஆற்றல், ஆளுமை உடையவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




# மாநகரசபையின் பொதுக்கூட்டம்

யாழ். மாநகர சபையின் இவ் ஆண்டுக்கான டிசெம்பர் மாத மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை செயலாளர் தா.தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ-9)

# வல்லுறவு புரிந்த நபருக்கு இரு வருட கடூழிய சிறை

பாடசாலைச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய நபருக்கு யாழ். மேல் நீதிமன்றம் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுவைகாசி மாதம் 27 ஆம் திகதி சாவகச்சேரியினைச் சேர்ந்த ஏழு வயது பாடசாலைச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரட்ணசிங்கம் ரஜீவ் என்பவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சிறுமி சாவகச்சேரியை சேர்ந்த போதிலும் நயினாதீவிலுள்ள தனது உறவினரொருவரின் வீட்டிற்கு சென்று தங்கியிருந்த போதே இச்சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி யாழ். மேல் நீதிமன்றில் குறித்த வழக்கு பாரப்படுத்தப்பட்டு நபருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு 6 வருடமாக நடைபெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகப்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு இருந்த குறித்த சந்தேக நபர் தன்னுடைய குற்றத்தை மன்றில் ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து தீர்ப்பு வழங்கிய ஆணையாளர் குறித்த குற்றவாளி 5 வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 25 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் தீர்ப்பளித்தார்.

குறித்த வழக்கில் குற்றவாளி சார்பில் சட்டத்தரணி கணாதீபனும் சட்டமா அதிபரினை பிரபலிக்கும் வகையிலும் பாதிக்கப்பட்ட சிறுமி சார்பிலும் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகி இருந்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலும் காபூலிலும் தூதரகங்கள் திறக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பில் ஆப்கானிஸ்தானுக்கான இஸ்லாமிய குடியரசு தூதரகமொன்றை திறந்து வைப்பதற்கும் ஆப்கானிஸ்தானின் காபூலில் இலங்கை தூதரகமொன்றை திறந்து வைப்பதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்தும் வகையிலேயே இத்தூதரகங்கள் திறந்து வைக்கப் படவுள்ளன.

அத்துடன் இவ்விரு நாடுகளும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலும் ஒத்துழைக்கவுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஸல்மைரசூலும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

மேலும் பல உயர்மட்ட அரசாங்க அதிகாரிகளுடனான சந்திப்பை மேற்கொண்ட ஆப்கா னிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான கலந்துரையாடலின்போது தாம் ஒரே விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் உள்நாட்டில் உருவான தீர்வின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் இரு அமைச்சர்களும் கூறினர்.

இலங்கைக்கான விஜயத்தை கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஸல்மை ரசூல் இன்று வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 20 இற்கு மேற்பட்டோரை குளவி கொட்டியது

மஸ்கெலிய நல்லதண்ணீர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லக்ஷபான தோட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் குளவி தாக்கியதில் பாதிக்கப்பட்ட 20 இற்கும் மேற்பட்டவர்கள் மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சடலம் ஒன்றை மயானத்திற்கு கொண்டு சென்ற வேளையில் மயானத்தில் மரம் ஒன்றில் இருந்த குளவிக்கூடு ஒன்று கலைந்து மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)




காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்
திருவெம்பாவை உற்சவநாள் சிறப்பு பட்டிமன்றம்

இடம் : கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்
காலம் : 22.12.2012 சனிக்கிழமை மாலை 6மணி

நிகழ்ச்சி நிரல்
- மாங்கல விளக்கேற்றல்
- திருவாசகம் ஓதல்
- வரவேற்புரை
- சிறப்புப் பட்டிமன்றம்
- நன்றியுரை

சிறப்புப் பட்டிமன்றம்
மனித வாழ்வின் மேன்மைக்கு பெரிதும் உதவி நிற்பது
படிப்பறிவா! பட்டறிவா!!

நடுவர் : விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள்
(முன்னாள் மாவட்ட நீதிபதி)

படிப்பறிவு
சட்டத்தரணி திரு.கே.சுகாஸ் (வருகை விரிவுரையாளர், சட்டத்துறை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)
திரு.ம.ஜங்கரன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்)
திரு.கே.எஸ்.றமணன் (உதவி விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

பட்டறிவு
காரை.திரு.எஸ்.கெங்காதரன் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், பூநகரி)
திரு.வேல்.நந்தகுமார் (ஆசிரியர், வித்தியானந்தா கல்லூரி, முல்லைத் தீவு)
திரு.பரா.றமேஸ் (காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்
நிர்வாக சபையினர், ஆசிரியர், மாணவர்கள்.
(சி-1821)


# நீதியரசர் ஷிராணிக்கு கூடுதல் பாதுகாப்பு

(கொழும்பு)

நீதியரசர் ஷிராணி திலகவர்தனவிற்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான மனுக்களை விசா ரணை செய்து வரும் காரணத்தினால் இவ்வாறு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

உச்ச நீதிமன்றினால் நேற்று முன்தினம் விசாரணை செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை நீதியரசர் ஷிராணி திலகவர்ததன உள்ளிட்ட மூவர் அடங்கிய குழாம் விசாரணை செய்தது.

அதிகளவான வேலைப்பளு காணப்பட்ட காரணத்தினால் பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கு விசாரணைகளில் பங்கேற்ற மனுதாரர்கள், பிரதிவாதிகள் உள்ளிட்ட பெருமளவானவர்கள் குழுமிய காரணத்தினால் இவ்வாறு மேலதிக பாதுகாப்புஏற்பாடுகள்செய்ய நேரிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுமக்களின் இதயங்களை ஊடகங்களே ஒன்றிணைக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் இதயங்களை ஒன்றிணைக்க ஊடகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் மனங்களை ஒன்றிணைக்க வேண்டியது நாட்டின் சகல ஊடகங்களினதும் தேசியப் பொறுப்பாகும். நாட்டின் அரசியல் கலாசாரத்தைப் போன்றே மக்களின் மனங்களை ஒன்றிணைக்க வேண்டியது நாட்டின் சகல ஊடகங்களினதும் தேசியப் பொறுப்பாகும்.

நாட்டின் அரசியல் கலாசாரத்தைப் போன்றே மக்களின் மனங்கள் பற்றியும் ஊடகங்கள்தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

நல்ல சமூகமொன்றை கட்டியெழுப்பி அதன் மூலம் மக்களுக்கு நன்மைகளை வழங்க ஊடகங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)


வாழ்வக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கண் பார்வையற்ற அல்லது சாதாரண எழுத்தை இயல்பாக வாசிக்க முடியாத அளவுக்குப் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 2240146 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடன் தொடர்புகொள்ளவும். அனுமதிபெறும் பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறைவிடம், கல்விச் செலவுகள், கல்விக்கான விசேட உபகரணங்கள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

தலைவர், வாழ்வகம்
(c-1823)





ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

13 அகவையில் இருந்து புதிய சுவர்ண யுகத்திற்கு வளர்ச்சியடையும் வலம்புரிக்கு எம் இனிய நல்வாழ்த்துக்கள். ஸ்ரீ அம்மா பகவான் பூரண அனுக்கிரகம் அளித்து அருளாசி வழங்க ஸ்ரீ அம்மா பகவானை பிரார்த்திக்கின்றோம்
நன்றி

சுழிபுரம் ஸ்ரீ அம்மாபகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையம்
யாழ்.மாவட்டம். தொ.பே: 0777657719



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>உயரம்: 5'6''<br>கி.பா: 11.75<br>தொழில்/ தகைமை: கணனிப் பொறியியலாளர்<br>தொ. இல: B -810 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:சதயம் 4<br>உயரம்: 5'<br>கி.பா: 36.5, 1இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BSc கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ. இல: G -805 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>உயரம்: 5'6''<br>கி.பா: 35, 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BSc (Final Year pending) Business Service Clerk (Australia PR)<br>தொ. இல: B -811 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்: 5'2''<br>கி.பா: 105, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: BCA.MBM வாடிக்கையாளர் அனுசரணை பிரதிநிதி<br>தொ. இல: G -807 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>உயரம்: 5'7''<br>கி.பா: 50.75, 12 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: France work permit 10வருடvisa)<br>தொ. இல: B -812 | பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 34.75<br>எ.பா: கலப்பு திருமணம் ஏற்கப்படும்<br>தொ. இல: G -814 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>உயரம்: 5'11''<br>கி.பா: 25<br>தொழில்/ தகைமை: HND, QS (கணனி விரிவுரையாளர்)<br>தொ. இல: B -813 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 63.5, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: கணக்காளர்<br>தொ. இல: G -816 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை முஸ்லிம் மயப்பட்டு விடவில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

சட்டக்கல்லூரிக்கு கூடுதலான முஸ்லிம் மாணவர்கள் இம்முறை தெரிவு செய்யப் பட்டிருப்பதை காரணம் காட்டி நீதித்துறை முஸ்லிம் மயப்படுத்தப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதை நீதித்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மறுத்துள்ளதுடன் நீதித்துறை முஸ்லிம் மயப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நீதியமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தேசிய புலமையாளர் கவுன்சிலின் தலைவர் எனக் கூறிக்கொண்டு பந்துல சந்திர சேகர ஊடகங்கள் ஊடாக தெரிவித்து வரும் குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சர் ஹக்கீம், ஜாதிக ஹெல உறுமய முக்கியஸ்தர் உதய கம்மன்பிலவிற்கு எடுத்துரைத்துள்ளார்.

சட்டக்கல்வி நீதியமைச்சுடன் சில விவகாரங்களில் தொடர்புபட்டிருந்தாலும் அது சட்டக் கல்வி மன்றத்தின் தனியான அமைப்பின் கீழேயே செயற்படுகின்றது.

அத்துடன் இலங்கைப்பரீட்சைகள் திணைகளமே அனுமதிக்கான பரீட்சையை நடத்தி வருகின்றது. அதற்கும் நீதியமைச்சுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

கொழும்பில் மாத்திரமே நடைபெறும் சட்டக்கல்லூரி நுழைவுக்கான இந்த பலத்த போட்டி பரீட்சைக்கு நாடு எங்கிலும் இருந்து பெரும் தொகையான விண்ணப்பதாரிகள் தோற்றுகின்றனர்.

இந்தப் பரீட்சை மும்மொழிகளிலும் நடைபெறுவதனால் முஸ்லிம் மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் தோற்றி சித்தியடைந்துள்ளமையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதுபற்றிய விளக்கம் தேவைப்பட்டோர் சட்டக்கல்லூரி அதிபரை அணுக முடியும்.

உண்மை இவ்வாறு இருக்க பெரும்பான்மை சமூகத்தினர் மத்தியில் தேவையற்ற விதத்தில் பீதி மனப்பான்மையை ஏற்படுத்தும் நோக்கில் தீய சக்திகள் இவ்வாறான விசமக்கருத்துகளை பரப்பி வருவது கண்டிக்க தக்கதும் விசமத்துக்குரியதும் ஆகும்.

அத்துடன் நீதிபதிகளை நியமிக்கும் விடயத்தில் நீதியமைச்சர் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டும் எந்த விதமான அடிப்படையும் அற்றதாகவும் அவர்களை நீதிச்சேவை ஆணை குழுவில் நியமிக்கின்றது. அது சுயாதீனமாக செயற்படும் ஓர் அமைப்பாகும்.

வடகிழக்கில் யுத்த காலத்தில் செயற்படாது இருந்த பல நீதிமன்றங்கள் மீண்டும் இயங்குவதோடு புதிதாக நீதிமன்றங்கள் சில நிறுவப்பட்டிருந்தாலும் அவற்றுக்கு நீதிச் சேவை ஆணைக்குழு எழுத்து பரீட்சை, நேர்முகப் பரீட்சைஎன்பவற்றின்ஊடாகநீதிபதிகளை தெரிவு செய்து நியமிக்கின்றது. அங்கு தமிழ்மொழி தெரிந்த நீதிபதிகள் நியமிக்கப்படுவதில் தவறு இல்லை. உண்மைக்கு மாறாக புனைந்து கூறப்பட்டுள்ள இந்த பொய்ப்பிரசாரத்தையும் போலி குற்றச்சாட்டுகளையும் தான் கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பொது அறிவு போட்டியில் வெற்றி பெற்றோர்

(மல்லாவி)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தினால் நடப்பாண்டுக்குரிய தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசகர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியின் முடிவுகள் யாழ்.பொதுசன நூலகத்தின் பிரதம நூலகரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

புவிராஜசிங்கம் பிரசாந்தன் (காரைநகர்), வாசுகி கிருஷ்ணராஜா (சிவன் பண்ணை வீதி, கவிப்பிரியா மனோகரன் (இராமகிருஷ்ண பாடசாலை வீதி, கொக்குவில் மேற்கு). (அ-3-15)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமியார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு **மெய்யுணர்வும் மெய்பொருளும்** எனும் தலைப்பிலான சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள கொழும்புஇந்துசமயகலை, கலாசாரசெயலாளர் சிவசுப்பிரமணியம் திருமுறை வித்தகர் ஞானி ஓங்காரமூர்த்தி சொற்பொழிவு ஆற்றவுள்ளார் என சபை அறிவித்துள்ளது. (அ-9)





வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இலக்கியப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களின் ஒரு பகுதியினருடன் விருந்தினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-எஸ்.ஆர்.கரன் ,என்.குமார்)

# பிரேரணையை கைச்சாத்திட்டவர்களே விசாரணை நடத்துபவர்களாகவுள்ளனர்

## குற்றம் சாட்டுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இந்த பிரேரணையில் கைச்சாத்திட்டவர்களே விசாரணை நடத்துபவர்களாகவும் உள்ளனர். இதற்கு அப்பாலும் முரண்பாடுகள் உண்டு என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

குற்றப்பிரேரணையை விசாரிப்பவர்களுக்கு குற்றப்பிரேரணை செயன்முறையுடன் வேறு வகையில் தொடர்புள்ளவர்களுக்கும் இடையில் குடும்ப உறவுகள் காணப்படுகின்றன. இது இன்னொரு முரண்பாடு ஆகும் என ஐ.தே.க. எம்.பி சுஜீவ சேனசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவின் கணவரான தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவருக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை தொடக்கப்பட்ட முறைபற்றி வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொடுக்கல் வாங்கல் நடைபெறாத ஒரு விடயத்தில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது எவ்வாறு? நான் கிரேக்க முறிகள் விடயத்திலும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பிலும் பல முறைப்பாடுகளை செய்தேன். ஆனால் இவை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் கூறினார்.

மேலும் த பினான்ஸ் கம்பனியில் முதலீடு செய்யும் தீர்மானம் சேமிப்பு வங்கியின் சபைகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறாயின் ஏன் ஏனைய சபை அங்கத்தவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்ச போன்றவர்கள் நீதித்துறையில் அதி உயர் அங்கத்தவரை விசாரித்தனர். இவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரோ எதிரணி உறுப்பினர்களோ இல்லாத நிலையிலும் விசாரணையை முடித்துவிட்டனர் என சேனசிங்க எம்.பி. கூறினார்.

அரசாங்கம் தனது செயல் மூலம் குற்றம் நிரூபிக்கப்படாதவரையிலும் நிரபராதி எனும் எடுகோளை தலை கீழாக்கிவிட்டது. நிரபராதி என நிரூபிக்கப்படாதவரை குற்றவாளி என்பதே இங்கு காணப்பட்ட எடுகோள்.

நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழு அறிக்கை தயாரிக்க முன்னர் அக்குழுவின் தலைவர் அந்த அறிக்கை பற்றி பகிரங்கமாக பேசிவிட்டார். கடாபி, முஹாபே, இடி அமீன் மற்றும் முபாரக் போன்றோரின் பங்காரு நீதிமன்றத்தை இது நினைவூட்டுகின்றது என அவர் மேலும் கூறினார். (அ-2)

# குஞ்சுக்குளம் ஆறு பெருக்கெடுத்தது

## 12 அடிக்கு மேல் வெள்ளம் பாய்கிறது

(மன்னார்)

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் தொங்குப்பாலத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதியில் சுமார் 12 அடிக்கு மேல் ஆற்றுநீர் பாய்வதாக குஞ்சுக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லக்டன் டி சில்வா தெரிவித்தார்.

இதனால் வாகனம் மற்றும் மக்களின் போக்குவரத்துக்கள் பெரியளவில் பாதிப்படைந்துள்ளாதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மடு பிரதான வீதியில் இருந்து பெரிய குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் தற்போது திருத்த வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அப்பகுதியூடாக காணப்படும் கட்டுக்கரை குளத்தின் துருசு பல வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ளம் காரணமாக தற்போது குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள ஆறு பெருக்கெடுத்துள்ளது.

இதனால் குஞ்சுக்குளம் தொங்கு பாலத்திற்கு அருகாமையில் உள்ள பிரதான வீதியூடாக ஆற்றுநீர் சுமார் 12 அடிக்கு மேல் பாய்ந்து கொண்டிருக்கின்றது. (அ-2)

# போதைப் பொருளுடன் ஜேர்மன் பிரஜை கைது

(கொழும்பு)

மாத்தறை -வெலிகம பகுதியில் போதைப் பொருள் வைத்திருந்த வெளிநாட்டவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப் பட்டுள்ளனர். குறித்த இடத்தில் அமைந்துள்ள பாலத்திற்கு அருகில் கார் ஒன்றை சோதனை செய்த போது அதில் இருந்து போதைபொருள் மீட்கப்பட்டுள்ளது.

காரில் பயணித்த ஜேர்மன் நாட்டு பிரஜையிடம் இருந்து ஹசிஸ் வர்க்க போதைப்பொருள் 64 கிராம் 400 மில்லிகிராம் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை வெளிநாட்டவருடன் சென்ற ரத்மலானை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் சந்தேகநபர்கள் இருவரும் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவுசெலவுத்திட்டத்தை பார்வையிடலாம்

பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம், நகரசபை கட்டளைச்சட்டம் 255 ஆம் அதிகாரம் பிரிவு 178(3) இற்கமைவாக நேற்று வியாழக்கிழமையிலிருந்து பொதுமக்கள் பார்வைக்காக நகராட்சி மன்ற அலுவலகத்தில் வைக்கப்படவுள்ளது என நகரபிதா சபா ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

☆☆☆☆☆☆☆☆

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைகள் சட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை சபையின் தலைமை அலுவலகம் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உபஅலுவலகங்கள் பொதுநூலகங்களில் இவற்றைப் பார்வையிடலாம் என ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார். (அ-9)

# 72 உயிரினங்கள் அழிந்துவிட்டன

## சிவப்பு அட்டவணையில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பலவித விலங்குகள் மற்றும் தாவரங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன அல்லது அழிந்து விட்டதாக அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கே உரிய உயிரினங்கள் குறித்து அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்டுள்ள சிவப்பு அட்டவணை 2012 எனும் அறிக்கையில் இலங்கையிலிருந்த 72 உயிரினங்கள் அழிந்துவிட்டன. அல்லது மறைந்து விட்டன என்பது கோடிட்டு காட்டப்பட்டுள்ளது.

சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான இனங்கள் குறித்து அரசின் அந்த சிவப்பு அட்டவணையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த உயிரினங்களின் இருப்பின் அடிப்படையில் அவை பல குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

அழிந்து விட்டவை, அழிவின் விளிம்பில் இருப்பவை, மிகவும் பலவீனமான நிலையில் உள்ளவை, அண்மைக்காலங்களில் அளவில் பெருகியுள்ளவை என அவை பட்டியலிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடா பகுதியில் இருந்த ஒரு வகையான கண்டல் தாவரமும் கரடியனாறு பகுதியில் தும்பாலை எனப்படும் ஒருவகை மரமும் முற்றாக காணாமல் போயுள்ளன.

இதேபோல் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வகையான தாவரங்கள் காணாமல் போயுள்ளதைக் கண்டுபிடிக்கக் கூடியதா இருக்கும் என கிழக்கு பல்கலைக் கழகத்தின் தாவரவியல் பேராசிரியரான கலாநிதி தங்கமுத்து ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த சிவப்பு அட்டவணை அல்லது புத்தகமே அரசுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். அழிவின் விளிம்பில் உள்ள இனங்களை காப்பாற்ற அடுத்தது என்ன செய்யலாம் எனவும் வல்லுநர் குழு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

அபிவிருத்தி, யுத்தம் போன்ற காரணங்களாலேயே பல இனங்கள் அழிந்தோ அல்லது அழிந்து போகக் கூடிய நிலையிலோ உள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# முன்னாள் போராளிகளுக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 12 ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு இவ்வாறு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய அடையாள அட்டைகளும் ஏனைய முக்கிய ஆவணங்களும் இவ்வாறு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டபோது வழங்கப்பட்ட தொழில்சார் பயிற்சிகளின் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. 782 பேருக்கு இன்னமும் புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



கோப்பாய் கோட்ட அதிபர்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதீபா பிரபா விருது பெற்றமையைப்பாராட்டி யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் மு/விக்னேஸ்வரனுக்கு யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இரத்துச் செய்யப்பட்ட மாநாட்டை நீதவான்கள் நடத்த தீர்மானம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனுசரணையுடன் வருடாந்தம் நடைபெறும் நீதவான்களுக்கான மாநாட்டை அரசாங்கம் இரத்து செய்த போதிலும் மாநாட்டை திட்டமிட்டபடி நடத்த நீதவான்கள் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கம் இம்மாநாட்டை இரத்து செய்த போதிலும் திட்டமிட்டபடி மாநாட்டை நடத்த நீதவான்கள் தீர்மானித்துள்ளனர். நீதிச் சேவைகள் பேரவையினால் இந்த வருடாந்த மாநாடு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்றும், நாளையும் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

வருடாந்த நீதவான்கள் மாநாட்டிற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு அனுசரணை வழங்கி வந்ததாகவும் அரசியல் காரணங்களுக்காக இம்முறை அனுசரணை மறுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தன்னார்வ அடிப்படையில் நீதவான்களின் பங்களிப்புடன் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் இந்த மாநாட்டின் பிரதம சொற்பொழிவாளராக கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது. இந்த மாநாட்டில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அவசர நிலைமை அறிவிப்பது தொடர்பில் தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

அவசர நிலைமை அறிவிப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் மழை வெள்ளம் காரணமாக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அவை அவசர நிலைமையை அறிவிக்க வேண்டிய அளவிற்கு பாரதூரமானவை அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவசர நிலைமை அறிவிக்கப்படுவதால் சுற்றுலாத்துறையும் நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மழை வெள்ளம் காரணமாக 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

மண்சரிவு, மழை வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களினால் இந்த உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சீரற்ற காலநிலையால் 15 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 34 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# வவுனியா செட்டிகுளம் ஊடான அரச பேருந்து சேவை சீரில்லை

## அரச ஊழியர்கள் பாதிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து செட்டிகுளத்திற்கு மேற்கொள்ளப்படும் அரச பேருந்து சேவை சீராக நடைபெறுவதில்லை என செட்டிகுள பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து தினமும் காலை 6 மணிக்கு புறப்படும் அரச பேருந்தில் செட்டிகுளம் பிரதேச அரச திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களும் பயணம் செய்து கடமையை மேற்கொள்வது வழமை. கடந்த சில நாட்களாக இப் பேருந்து சேவை ஒழுங்காக நடைபெறாமையால் செட்டிகுளம் செல்லும் அரச உத்தியோகத்தர்கள் காலை 6 மணியில் இருந்து பேருந்துக்காக காத்திருந்து 7 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்படும் பேருந்திலேயே பயணிக்க முடிகின்றது.

இப்பேருந்தில் பயணம் செய்பவர்கள் காலை 9 மணிக்கே செட்டிகுளத்தை சென்றடைய முடிகின்றது. இதனால் தினமும் அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்கள் தாமாக வருகை தருவதனால் அவர்களுடைய சேவை பாதிக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாடசாலை செல்லும் ஆசிரியர்களும் மாணவர்களும் ஏறத்தாழ ஒரு மணித்தியாலம் தாமதித்தே பாடசாலையை சென்றடைவதனால் செட்டிகுளம்பிரதேச பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைவதாக அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையை போக்குவதற்கு செட்டிகுளம் பிரதேசத்திற்கு சேவையாற்ற செல்லும் அரச உத்தியோகத்தர்களின் நலன்கருதி சீரான அரச போக்குவரத்து சேவையை ஏற்படுத்தித்தர ஆவன செய்யுமாறு அரச உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-266)

# தாதியர் வேலை நிறுத்தம் வெற்றியளித்துள்ளது

## அரச தாதியர் சங்கம்

அரச தாதியர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அடையாள வேலை நிறுத்தம் வெற்றியளித்துள்ளதாக அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஐந்தம்ச கோரிக்கைகளை முன்வைத்து 24மணிநேர அடையாள வேலை நிறுத்த நடவடிக்கையை அரச தாதியர் சங்கம் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்தது.

இந்நிலையில், அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய தாதியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ஆபாச இணையங்கள் தடை குறித்த வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை இளைஞர் யுவதிகள் தோன்றும் ஆபாச காட்சிகள் அடங்கிய இணையத்தளங்களை தடை செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

குறித்த இணையங்களை தடை செய்வது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை அன்றையதினம் பெறப்பட இருந்தது.

எனினும் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் நீதிமன்றில் எவரும் பிரசன்னமாகியிருக்கவில்லை. இதனால் மனு மீதான விசாரணை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்னா ஹசாரேக்கு அப்துல் கலாம் ஆதரவு

அன்னா ஹசாரே வழியை பின்பற்றினால் ஊழலுக்கெதிராக வலுவான சட்டம் வருவது உறுதி. இவ்வாறு கலாம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டில் அவ்வாறான சட்டம் வந்தால் ஒரு சிறையில் கூட இடம் இல்லாமல் நிரம்பி வழியும் என்று கலாம் குறிப்பிட்டார்.


புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு அப்துல் கலாம் பேசும் போது, கடந்த 6 மாதங்களாக இளைஞர்களிடத்தில் ஒரு மாற்றத்தை பார்க்கிறேன்.

இளைஞர்கள் தற்போது நாட்டை வளர்ச்சிப்பதையில் கொண்டு செல்ல தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்கள்.

இதன்மூலம் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் பொருளாதார ரீதியில் இந்தியா வளர்ச்சியடைவது நிச்சயம். பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் சமூகத்தின் அடித்தட்டில் உள்ள மக்களையும் சென்றடையும் வகையில் திட்டமிடப்பட வேண்டும்.

அதாவது நாட்டிலுள்ள 6 இலட்சம் கிராமங்களில் வசிக்கும் 70 கோடி மக்களுக்கு தரமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்றார்.

# சச்சினுக்கு எம்.பி. பதவி; உயர்நீதிமன்றம் தீர்ப்பு



(சென்னை)

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை எம்.பியாக நியமித்தது ஏற்றுக்கொள்ளப்படும் என டில்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் நிகழ்த்திய சாதனைகளுக்காக அவரை கௌரவப்படுத்தும் வகையில் மத்திய அரசு டில்லி மாநிலங்களவையில் நியமன உறுப்பினர் பதவியை கொடுத்தது.

இதில் இந்திய அரசியல் சட்டப்படி கலைத்துறையை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே எம்.பி. பதவி வழங்கப்படுவது வழக்கம் என்பதால் விளையாட்டுத்துறை வீரர்களுக்கு வழங்கப்படுவது முறையல்ல என கூறி டில்லி உயர் நீதிமன்றத்தில் ஒருவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நேற்று டில்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதனை விசாரித்த நீதிபதி இந்த நியமனம் சரியானதே என்றும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றும் கூறி சச்சினுக்கு எதிராக தொடரப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

# சீனாவிற்கு எதிராக இந்தியா நடவடிக்கை

இந்தியாவில் தரமற்ற பொருட்களை குவிக்கும் சீனாவின் நடவடிக்கையை தடுக்க அரசுக்கு புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இறக்குமதியாகும் சீனப் பொருட்களின் தரம் குறித்து உரிய ஆதாரங்களுடன் புகார் செய்யப்பட்டால் மத்திய அரசு அதைத் தடுக்கும் என மாநிலங்களவையில் வர்த்தக துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி குறிப்பிட்டுள்ளார்.

தரமற்றப் பொருட்களை குவிப்பதை எதிர்த்து நடவடிக்கை எடுக்க உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர் என்ற வகையில் இந்தியாவுக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

பொருட்குவிப்பு, தடுப்புவரி, இறக்குமதி, கட்டுப்பாடு உள்ளிட்ட பல நடவடிக்கைகள் மூலம் இதை மேற்கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஐம்பதே ஆண்டுகளில் கடலில் மூழ்கும் சென்னை

## நிபுணர்கள் எச்சரிக்கை


புவியில் வெப்பம் அதிகரித்து வருவதால் இன்னும் 50 ஆண்டுகளில் சென்னை உட்பட தமிழகத்தின் கடற்கரையோரப்பகுதிகள் கடலுக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்திய அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா கடந்த இரண்டு நாட்களாக மத்திய தொல் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 2 ரில்லியன் தொன் ஐஸ்கட்டிகள் உருகி விட்டதாகவும் எதிர்காலத்தில் சென்னை உட்பட ஏராளமான பகுதிகள் கடலுக்குள் மூழ்க வாய்ப்புள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரித்தனர்.

மேலும் இம்மாநாட்டின் தீர்மானங்களையும் முக்கியமான பரிந்துரைகளையும் நாளையதினம் அறிவியல் காங்கிரஸ் கூட்டமைப்பினர் பிரதமரிடம் வழங்கவுள்ளனர்.

# இந்தியப் பெண் மரணத்தின் எதிரொலி அயர்லாந்தில் கருக்கலைப்பிற்கு அங்கீகாரம்



இந்திய பெண் மருத்துவர் சவீதாவின் மரணத்தை தொடர்ந்து கருக்கலைப்பு செய்து கொள்வதை அனுமதிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும் என அயர்லாந்து அரசு அறிவித்துள்ளது.

இதுபற்றி உரையாற்றிய அந்நாட்டு பிரதமர் எண்டா கென்னி எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு தொடக்கத்தில் புதிய சட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என தெரிவித்துள்ளார்.

பின்னர் படிப்படியாக சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதன்படி அயர்லாந்து அரசின் புதிய சட்டப்படி கர்ப்பிணியின் உடல் நிலை இக்கட்டான நிலையில் இருந்தால் கருக்கலைப்பு செய்து கொள்ள அனுமதிக்கப்படும்.

கருக்கலைப்பு செய்வதை முறைப்படுத்தும் வகையில் மேலும் பல விதிமுறைகளை இயற்றவும் அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் அயர்லாந்தில் வசித்த இந்தியாவை சேர்ந்த பெண் மருத்துவர் சவீதா என்ற கர்ப்பிணிக்கு கருச்சிதைவு ஏற்பட்டது.

எனினும் அயர்லாந்து கத்தோலிக்க கிறிஸ்தவ நாடு என்பதால் அந்நாட்டு சட்டப்படி கருக்கலைப்பு செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் இரத்தத்தில் நோய்தொற்று ஏற்பட்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி அவர் உயிரிழந்தார்.

சவீதா மரணத்தை தொடர்ந்து அயர்லாந்து முழுவதும் கருக்கலைப்புக்கு ஆதரவான போராட்டம் நடைபெற்று வந்தது. அதனை தொடர்ந்து அந்நாட்டு அரசு கருக்கலைப்பு தடைச்சட்டத்தை தளர்த்தியுள்ளது.

# கொலைக் குற்றவாளிக்கு தலை துண்டித்து மரணதண்டனை

## சவுதியில் நிறைவேற்றம்

சவுதி அரேபியாவில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இந்நிலையில் சவுதியில் சூடானை சேர்ந்த ஓத்தேன் முகமது என்பவர் தங்கி பணிபுரிந்தவருக்கு அவ்வாறான மரணதண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

முகமதுக்கும் சக நாட்டுக்காரரான சாலா அகமதுக்கும் இடையில் முரண்பாடுகள் உருவானது. இதனையடுத்து அவரை முகமது தலையில் அடித்து கொன்றுள்ளார்.

இந்த கொலை குற்றத்திற்காக முகமதுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதனையடுத்து மெக்க நகரின் மேற்கு பகுதியில் பொது இடத்தில் வைத்து முகமதுவின் தலையை வெட்டி தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதேபோன்று கடந்தாண்டு மட்டும் 89 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என சர்வதேச பொதுமன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

# அமைதிக்கான நோபல் பரிசு அகதிகளின் குழந்தைகளுக்கு

## செலவிடப்படும் என்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஐரோப்பிய பரிசு தொகையை அகதிகளின் குழந்தைகள் நலனுக்காக செலவிட முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டது.

உலக போரின் போது பகை நாடுகளாக இருந்தவை இன்று ஒன்றுபட்டு செயற்படுவதை பாராட்டி பரிசு தொகையும் வழங்கப்பட்டது.

நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் நடந்த விழாவில் ஐரோப்பிய ஒன்றியத்தலைவர் ஹெர்மான் வான் ரோம்பி நோபல் பரிசை பெற்றுக் கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், உலகம் முழுவதிலும் 1.5 கோடி மக்கள் அகதிகளாக உள்ளனர். அகதிகளில் 70 இலட்சம் பேர் குழந்தைகள். சிரியாவில் இடம்பெற்றுவரும் சண்டையால் 4 ஆயிரம் குழந்தைகள் ஈராக் எல்லையில் உள்ள முகாமில் உள்ளனர். இதேபோன்று கொலம்பியாவிலும் 5 ஆயிரம் குழந்தைகளும் காங்கோவில் 11 ஆயிரம் குழந்தைகளும் பாகிஸ்தானில் 3 ஆயிரம் குழந்தைகளும் அகதிகளாக உள்ளனர்.

எனவே நோபல் பரிசின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையை குழந்தைகளின் நலனுக்காக கொடுக்க உள்ளோம். யுனிசெப் மற்றும் ஐ.நா. அகதிகள் நலகுழு மூலம் இந்த நிதித்தொகை செலவிடப்படும் என்று தெரிவித்தார். (அ-2)

# தென்கொரிய ஜனாதிபதியாக சர்வாதிகாரி பார்க் மகள் தெரிவு

தென்கொரியாவில் முதன் முறையாக பெண் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பார்க் இக் யாங் ஹேய் முன்னாள் சர்வாதிகாரி பார்க் யுங் கீவின் மகள் ஆவார். இவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஆளும் லிபரல் கட்சியை சேர்ந்த மூன்-ஜே-இன்னை தோற்கடித்துள்ளார்.

60 வயதாகும் செல்வி பார்க் தனது வெற்றி நாட்டின் பொருளாதாரத்தை நிறைநிறுத்துவேன் என கூறியுள்ளார்.

இந்நிலையில் நாட்டில் மேம்பாட்டை கொண்டு வருவதற்கு பார்க் தனது எதிர்ப்பாளர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும் என்று அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இத் தேர்தலில் நாட்டுப் பிரச்சினைகளை மையமாக வைத்தே பிரசாரங்கள் இருந்துள்ளன என்றும் அண்டை நாடான வட கொரிய பிரச்சினைகள் குறித்து அதிகம் பேசப்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டார் தமிழர்

கன்னியாகுமரி மாவட்டம் சின்னத்துறை மீனவ கிராமத்தை சேர்ந்த தாம்சன் பிரிட்டோ (வயது 34) என்ற நைஜீரியா நாட்டில் உள்ள ஜேர்மனிய கப்பலில் 2 ஆம் நிலை உயரதிகாரியாக இருந்த தமிழர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். இவர் கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நைஜீரிய நாட்டில் உள்ள அபிட்ஜா என்ற துறைமுகத்துக்கு சென்றார்.

இந்நிலையில் அண்மையில் அவருடைய தந்தைக்கு மும்பை கப்பல் ஏஜென்சி நிறுவனம் ஒரு அதிர்ச்சி தகவலை தெரிவித்தது.

நைஜீரிய நாட்டில் இருந்த தாம்சன் பிரிட்டோ (வயது 34) உட்பட 5 பேரை கடற்கொள்ளையர்கள் கடத்தி சென்று விட்டதாக அவர்கள் கூறினார்கள்.

தகவல் தெரிந்த மீனவ அமைப்பினர் தாம்சன் பிரிட்டோவை பத்திரமாக மீட்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசையும் மத்திய அரசையும் வலியுறுத்தி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்த்திகை 2, 3,4ஆம் பாதங்கள்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கேது விலகுவதால் இனிமேல் கேட்ட உதவிகள் கிடைத்துவிடும்!**

**70/100**

**பிறரை மயக்கும் விதத்தில் பேச்சாற்றலை பெற்ற இடப இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் அள்ளிக் கொடுக்கும் வல்லமைபெற்ற கிரகமாக விளங்கும் சுக்கிரன், உங்கள் இராசி நாதனாக இருக்கிறார். எனவே, வாழ்க்கையில் எல்லா விதமான சுகங்களையும் சந்தோஷங்களையும் அனுபவிப்பவர்களாகவே விளங்கப்போகிறீர்கள்.

மற்றவர்களுக்கு துன்பம் வரும் பொழுதெல்லாம், மனம் உருகுவீர்கள். எப்படி செயற்பட்டால், அவர்கள் நிலைமாறும் என்று இனிய ஆலோசனைகளை அள்ளி வழங்குவீர்கள். அதே நேரத்தில் களத்திரக்காரகன் சுக்கிரனே உங்களுக்கு 6 ஆம் இடத்திற்கும் அதிபதியாக வருவதால், கருத்து வேறுபாடு இல்லாத வாழ்க்கைத் துணை அமைய வேண்டுமானால், பொருத்தம் பார்த்தே திருமணம் செய்து கொள்வது நல்லது.

பாதி வயதிற்குமேல் பணம் சேர்ப்பதிலும் உங்கள் குறிக்கோள் இருக்கும். உணவில் இனிப்பு சுவையை அதிகம் நாடும் நீங்கள், மதிப்பும் மரியாதையும் மிக்கவர்களாக விளங்குவீர்கள். வசதி, வாய்ப்போடு பிறந்தவர்களின் பட்டியலில் இடம்பிடிக்கும் இராசியான இடப இராசியில் பிறந்த உங்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி எப்படியெல்லாம் மாற்றத்தை கொடுக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**அஷ்டலட்சுமி யோகம் தரும் ஆறாமிடத்து இராகு!**

**ஆன்மீக நாட்டம் உருவாக்கும் பன்னிரண்டாமிடத்துக்கேது!**

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த இராகுவும் உங்கள் இராசியான இடப இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளி பயணத்தில் பின்னோக்கிச் சென்று 02-12-2012 முதல் ஆறாமிடத்தில் இராகுவாகவும் 12 ஆம் இடத்தில் கேதுவாகவும் சஞ்சரித்து முன்னேற்றப்பாதையில் நீங்கள் அடியெடுத்து வைக்கவும் முக்கிய திருப்பங்களை நீங்கள் காணவும் வழி வகுக்கப்போகிறார்கள்.

ஆறாமிடத்து இராகு அஷ்டலட்சுமி யோகத்தை தரும் என்று சொல்வார்கள். தூரதேசத்தில் இருக்கும் நண்பர்களின் பழக்கத்தால் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை கிடைக்கும். காரசாரமாக பேசியவர்கள் எல்லாம் இனி கனிவோடு பேச முன்வருவர்.

தாராள மனம் உங்களுக்கு இருப்பதால், நீங்கள் தாட்சண்யத்திற்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருப்பீர்கள் அதன்விளைவாக ஏராளமான பொருட்கள் விரயமாகி இருக்கலாம். இழந்த பொருட்களையெல்லாம் மீட்டுவரும் வாய்ப்பு இந்தப் பெயர்சியில் உங்களுக்குக் கிடைக்கப்போகிறது.கடந்த சில ஆண்டுகளாக வேலைக்கு முயற்சி செய்தும் வேலைகிடைக்கவில்லையே என ஏங்கியவர்களுக் புதிய வேலை கிடைத்து புன்னகை பூப்பீர்கள். மதிய நேரத்தில் கூட சாப்பிமுடியாத அளவிற்கு சம்பாத்தியம கூடும். அதிக கடன் வாங்கிவிட்டோம் என்ற கவலை குறையும்.

தொழில்வளர்ச்சக்கு தடையாக இருந்தவர்கள் இனி விலகுவர். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும் என்பதால், அந்த மூலதனத்தைக்கொண்டும் உங்கள் மூளை பலத்தைக்கொண்டும் இலாபம் தரும் தொழில் ஒன்றை செய்ய முன்வருவீர்கள்.

நாட்டுப் பற்று மிக்கவர்களும் நல்லவர்களும் உங்கள் வீட்டிற்கு வந்தே உதவ முன்வருவர். பெயர்ச்சியாகும் நேரத்தில் குருவக்ர கதியில் இருக்கிறார். பிறகு மே 2012 இற்கு மேல் குருவின் பார்வை இராகுவின் மீது பதியத்தொடங்குகிறது. தேவ குருவின் பார்வை இராகுவின் மீது பதியும் போது உங்கள் ஆவல்கள் அனைத்தும் கைகூடும்.

பெயர்ச்சியாகும் இராகு தேக நலனில் மட்டும் கொஞ்சம் திடீர் திடீர் என தொல்லைகளைக் கொடுக்கும். நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் போதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. ஆரம்பத்திலேயே எதையும் கவனித்தால் சிரமப்பட வேண்டாமல்லவா? வழக்குகள் இதுவரை

# இடபம்



கேது சஞ்சரிப்பாரல்லவா? அதன் பலனால் விரயங்கள் அதிகரிக்கும் என்றாலும் வரும் விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதோடு அத்தியாவசியப் பொருட்களையெல்லாம் வாங்கிக் குவிக்கப்போகிறீர்கள். இதுவரை சிக்கனமாக இருந்த நீங்கள் இனி செலவு செய்யத்தான் வேண்டும். தக்கவிதத்தில் பொருளாதாரம் உங்கள் கைகளில் வந்துசேரும் பொழுது அது தானாகவே விரயமாகிச் செல்வதற்கு முன்னால், நீங்களாகவே ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பது நல்லது.

மனைவி மக்களுக்கு வேண்டிய அளவு ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொடுக்கலாம். மண்டபங்களைக் கட்டி வாடகைக்கு விடலாம். பிள்ளைகளின் கல்யாண முயற்சிக்கும் கை கொடுத்து உதவ முன்வருவீர்கள். பழைய வீட்டை புதுப்பித்து புதிய வீடாக்கும் பணி வெற்றிபெறும். நாகரிகமான முறையில் நல்ல அமைப்பில் வீடுகட்ட வேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

உறவினர்களின் இல்லங்களில்

இராகு, குருகாலில் சஞ்சரிக்கும்போது இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் கிட்டும் எதிர்கால நலன் கருதிபுதிய திட்டங்களை தீட்டுவீர்கள். மதிப்பு மிக்கவர்கள் உங்களுக்கு மனம் கோணாமல் உதவி செய்வர். துதி பாடும் கூட்டம் விலகும். தொகை எதிர் பார்த்தபடி வந்துசேரும்.

இராகு சுய சாரத்தில் சஞ்சரிக்கும் போது வருமானம் இருமடங்காகும். வசதி வாய்ப்புகள் பெருகும். எதிரிகள் விலகிச்செல்வர். பங்காளிப் பகை மாறும். பதவி உயர்வில் இருந்த தடை அகலும்.

இராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்போது உங்கள் இராசிக்கு சப்தம விரயாதிபதியாக செவ்வாய் இருப்பதால் குடும்பத்தில் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகள் கூடும். கொடுக்கல், வாங்கல்களில் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை வரவு வருமுன்னதாகவே செலவு காத்திருக்கலாம். நூதன கருவிகளின் சேர்க்கையுண்டு. அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்லவேண்டிய நேரமிது.

**பாதசாரப்படி கேது தரும்பலன்கள்!**


மேட இராசியில் அடியெடுத்து

# இழந்தவற்றையெல்லாம் மீட்கும் வாய்ப்பு கிட்டும் !

எத்தனை நடைபெற்றாலும். அவற்றில் ஒரு திருப்பத்தை தரப்போவது இந்த இராகு கேது பெயர்ச்சிதான். இந்த இராகு எதிரிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளின் பலத்தை குறையவைக்கும். அதிரடியாக பேசும் நீங்கள் எடுக்கும் முடிவுகள் ஆச்சரியப் பட வைக்கும். புதிய திருப்பங்களை நீங்கள் புத்திசாலித்தனத்தினால் பெற்றுக்கொள்வீர்கள். உத்தியோக உயர்வு உண்டாகும். ஊதிய உயர்வு வந்து சேரும். உயர் அதிகாரிகளின் தொல்லைகளை தாக்குப்பிடிக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு விடிவு காலம் பிறந்துவிட்டது. மேலதிகாரிகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வார்கள்.

அஷ்ட லட்சுமி யோகம் தரும் இராகு உங்கள் சுயஜாதகத்தில் ஏதேனும் ஒரு இடத்தில். இருக்கலாம். உங்கள்

நடை பெறும் சுபகாரிய நிகழ்சிகளுக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். .வெளி நாட்டுப்பயணம் விரும்பும் விதத்தில் அமையும். மனைவிமக்கள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும். அரசியல் துறையில் ஈடுபட்டவர்கள் இழந்த செல்வத்தை,செல்வாக்கை மீண்டும் பெறுவர். மற்றவர்கள் உங்களை நம்பி ஒப்படைத்த பொறுப்



வைத்த கேது முதலில் சூரயன்சாரத்தில் சஞ்சரிக்கிறார். எனவே குடும்ப சுமை கூடும். கொள்கைப்பிடிப்புடன் செயற்பட இயலாது ஏதேனும் ஒரு கவலை இருந்துகொண்டே இருக்கும். வீடு, இடம் வாங்குவது சம்பந்தமாக செலவிட்டு மகிழ்வீர்கள். தாய் வழியே தனவரவு உண்டு. வாகன மாற்றம் செய்யும் முயற்சியிலோ, வாங்கும் முயற்சயிலோ வெற்றிகிட்டும்.

இராசி நாதன் சுக்ரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும்போது கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. எதிரிகளின் பலம்கூடும் நேரமிது. இறைவழிபாடு இக்காலத்தில் உங்களுக்கு அதிகம் தேவை. உத்தியோகம், தொழில் திசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு மாற்றம் ஏற்படும் நேரமிது. ஊர்மாற்றம், இட மாற்றம் கூட ஒருசிலருக்கு வந்து சேரும்.

கேது,கேது சாரத்தில் சஞ்சரிக்கும்போது விரயங்கள் மேலோங்கும். வருமானத்தைக் காட்டிலும் செலவு கூடும். வண்டி,வாகனங்களை மாற்ற நினைப்பீர்கள். உடல்நலத்தாலும் ஒரு தொகையை செலவிட நேரிடலாம். உடனிருப்பவர்களினாலும் ஒரு தொகையை செலவிட நேரிடலாம். தாட்சண்யம் தனவிரயம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். யோசித்து செயற்படுவதோடு மட்டுமல்லாமல் இறைவனைப் பூசித்தும் நாக கவசத்தைவாசித்தும் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வதன் மூலமே சந்தோசங்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

மனைவி மக்களின் ஜயாதகங்களிலும் அந்தப்பாம்புக் கிரகங்கள் இருக்கும் இடம் எது என்பதை அறிந்து கொள்ளுங்கள். எந்தெந்தக் கிரகங்கள் அதைப் பார்க்கின்றன. அது நல்ல பலனை அள்ளி வழங்க என்ன பரிகாரம் செய்யவேண்டும், எந்தக் கோயிலுக்குச் சென்றால், உங்கள் ஆவல்கள் நிறைவேறும் என்பதை நீங்கள் அறிந்து செயற்பட்டால், இந்த நேரம் இனிய நேரமாக அமையும்

**பரபரப்பாக செயற்பட வைக்கும் 12 ஆம் இடத்து கேது!**

6ஆம் இடத்தில் இராகு சஞ்சரிக்கும் போது அதேநேரத்தில் 12ஆம் இடத்தில்

புக்களை முடித்துக்கொடுத்து உங்கள் மதிப்பை உயர்த்திக்கொள்வீர்கள்.

அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டுவந்து அலங்கரிக்கும் நேரம் இது. ஞானகாரகனாக கேது விளங்குவதால், புண்ணிய நதிகளில் தீர்த்த மாடி புகழ்பெற்ற தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு கிட்டும். வேலை வாய்ப்பு தேடி காத்திருப்பவர்களுக்கு தற்சமயம் வேலை கிடைக்கும் அமைப்பும் உண்டு. சுயஜாதகத்தை ஒருமுறை புரட்டிப்பார்த்துவிட்டு, பிறகு சம்மதிப்பதுதான் நல்லது.

**பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!**

துலாம் இராசியில் சஞ்சரிக்கும்

**வாழக்கை வசந்தமாக வழிபாடு!**

6ஆம் இடத்து இராகு அதிர்ஷ்டத்தை அள்ளி வழங்கவும், 12ஆம் இடத்துக்கேது பலவிதங்களில் நன்மையை வழங்கவும் அருகிலுள்ள சிவாலயத்திற்குச் சென்று பிரதோச நாளில் நந்திப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

சுயஜாதகத்தில் ராகு கேதுக்களின் சாரபலமறிந்து பரிகாரம் செய்து உங்களுக்கு உகந்த நாளில் வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூனு காசுப்புண்ணியம்





ஒரு கிராமத்தில் சஞ்சீவி என்ற வியாபாரி இருந்தான். அவனுக்கு பணம்தான் உயிர். ஆனால் அவனது மனைவி காமாட்சிக்கு தன் கணவனின் கஞ்சத்தனம் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

ஆனாலும் தன் கணவனின் மனம் வருந்தாமல் இருக்க அவள் கூடியவரையிலும் செலவுகளைக் குறைத்துக் கொண்டே வந்தாள். தானம், தர்மம் என்று ஏதாவது செய்ய விரும்பினால் அவள் அதைத் தன் கணவன் கையாலேயே செய்யவைத்து வந்தாள்.

நிறையப்பணம் இருந்த போதிலும் அத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தைகூட பிறக்கவில்லை. குழந்தைவேண்டுமென்று காமாட்சி எல்லாத் தெய்வங்களையும் வேண்டியும் தானதர்மங்கள், பூஜைகள் என்றெல்லாம் செய்யலானாள். சஞ்சீவி அவற்றை தடுக்கவில்லை.

இவ்வளவு செய்தும் குழந்தை பிறக்காததால் தன் எடைக்கு சமமாய் நகையும் தன் கணவனுக்கு கிடைக்கும் ஒருவருட இலாபத்தை காணிக்கையாகச் செலுத்துவதாயும் தன் குல தெய்வத்திடம் அவள் வேண்டிக் கொண்டாள்.

இந்த வேண்டுதலுக்குப் பின் காமாட்சி கர்ப்பவதியாகி பத்தாவது மாதத்தில் ஒரு ஆண்குழந்


## அம்புலிமாமா கதைகள்

தையை பெற்றெடுத்தாள். அப்போது அவள் தன் கணவனிடம் குல தெய்வத்திடம் தான் வேண்டிக் கொண்டதைக்கூறினாள். அதைக் கேட்ட சஞ்சீவி இதென்ன பைத்தியக் காரத்தன வேண்டுதல்.

நீ வேண்டிக்கொண்ட துலா பாரத்திற்கும் ஒருவருட இலாபத்திற்கும் எவ்வளவு பணம் போகும் என்பது தெரியுமா? இது நடக்காது என்றால் காமாட்சியோ இது நம் குலதெய்வத்திற்கு வேண்டுதல்.

இதை நிறைவேற்றாவிட்டால் நமக்கு என்ன கெடுதல் நேரும் என்றோ நம்குழந்தையின் நிலை என்ன ஆகும் என்றோ சொல்ல முடியாது. எனவே பிரார்த்தனை செலுத்தியே தீரவேண்டும் என்றாள். இதைக் கேட்டபின் சஞ்சீவி சம்மதித்தான்.

இதற்குச் சில நாட்களுக்குப்பின் சஞ்சீவி பிரார்த்தனையைச் செலுத்த தொலைவில் உள்ள தன்குல தெய்வக் கோயிலுள்ள ஊருக்கு



புறப்படத் தொடங்கினான். சஞ்சீவி வருட இலாபம் ஆயிரம் ரூபாய் என்று கூறி எடுத்துக்கொண்டான்.

காமாட்சி தன் நகைகளை எல்லாம் அணிந்துகொண்டு புறப்பட்டாள். அவர்கள் வீட்டுக்கதவைப் பூட்டி விட்டு பார்த்தபோது வீட்டுத் திண் ணையில் ஒரு பிச்சைக்காரன் உட் கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அவனும் நல்லது செய்ய கோவிலுக்குப் போகிறீர்கள். இந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுப்போங்கள். புண்ணியம் கிடைக்கும் என்றான்.

சஞ்சீவியோ புண்ணியமாவது புண்ணாக்காவது. உன்னால் எனக்கு புண்ணியம் கிடைக்கவேண்டாம். எதுவும் கொடுக்கமாட்டேன். போ என்று எரிந்து விழுந்தான்.

ஆனால் காமாட்சியோ ஏன் இப்படி அவன்மீது கோபப்படுகிறீர்கள். ஏதாவது கொடுத்தால் குறைந்தா போய்விடும் என்றுகூறி மூனு காசுகளை அவனது கப்பரையில் போட்டுவிட்டுச் சென்றாள்.

அதைப் பார்த்த சஞ்சீவி முகத்தைச் சுழித்தவாறு இந்த மூனு காசால் உனக்கு புண்ணியம் கிடைத்து விடுமா? அது ஆழாக்கா அல்லது கால்படியா என்று கேலியாக கேட்டான். காமாட்சியும் தானதர்மம் செய்வதைக்கேலி செய்யாதீர்கள் என்று கூறி அவனோடு சென்றாள்.

குலதெய்வ கோயிலை அடைந்ததும் அவர்கள் குளித்துவிட்டு கோவிலுக்கு சென்றார்கள். ஆயிரம் ரூபாவை எடுத்து காமாட்சியிடம் கொடுத்து இது ஒரு வருட இலாபப் பணம் இதை உண்டியலில் போடு. நம் வழிச்செலவுக்காக தனியாக ஆயிரம்ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன். அதைப்பத்திரமாக வைத்திரு என்று அந்தப்பணத்தையும் கொடுத்தான். காமாட்சி முதலில் ஆயிரம் ரூபாவை உண்டியலில் போட்டாள். பின்பு துலாபாரத்தில் தன் நகைகளோடு தன் கணவன் வழிச்செலவிற்காக கொடுத்திருந்த



ஆயிரம் ரூபாவையும் தன் கைப்பிசகாக வைத்துவிட்டாள்.

வேண்டுதல் முடிந்ததும் அவர்கள் தம் ஊருக்குப் புறப்பட்டார்கள். அப்போது சஞ்சீவி வழிச்செலவு பணத்தைக் கொடு என்றாள். அப்போது காமாட்சி அந்தப் பணத்தையும் சேர்த்து துலா பாரத்தில் வைத்து விட்டேனே என்று அவள் கூறவே சஞ்சீவி தலையில் அடித்துக் கொண்டு எல்லாப் பணமும் போய் விட்டதே.

இப்போது நம் ஊருக்கு எப்படிப் போவது? என்று அழாத குறையாகக் கேட்டான்.

காமாட்சியும் நீங்கள் கணக்கில் ஏதோ தவறு செய்திருக்கிறீர்கள். அதனால் குலதெய்வம் தண்டித்து விட்டது. நடந்தே நம் ஊருக்குப் போவோம். அவர்களிடம் சிறிது பணம்கூட இல்லை. வழியில் கண்டவர்களைக் கெஞ்சிக்கேட்டு கிடைத்ததைச் சாப்பிட்டவாறே சென்றார்கள்.

சிரமப்பட்டு சிலநாட்களுக்குப் பின் எப்படியோ தம் ஊருக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அப்போதும் பழைய பிச்சைக்காரன் தன் வீட்டுத் திண்ணையில் இருப்பதை சஞ்சீவி பார்த்தான். அவனைத் திட்ட ஆரம்பித்தபோது அவனை ஏன் திட்டுகிறீர்கள்.

நீங்கள் ஊரில் இல்லாதபோது சில திருடர்கள் உங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களை அவன் அடித்துவிரட்டி விட்டு இவன் தினமும் உங்கள் வீட்டைக் காவல் காத்துவருகிறான் என்றார்கள். சஞ்சீவி மலைத்துப் போய் நின்றான்.

அப்போது காமாட்சி பார்த்தீர்களா நான் கொடுத்த மூனு காசால் கிடைத்த புண்ணியத்தை! அதனால்தான் நம் வீடுவாசல், பணம், பண்டம் எல்லாம் கொள்ளை போகாமல் தப்பியது என்றான்.

சஞ்சீவியும் தானதர்மம் செய்வதால் என்ன பலன் கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்டேன்.

இனிமேல் நானும் அவற்றை செய்துவருவேன் என்றான். அதைக்கேட்ட காமாட்சி அகமகிழ்ந்தாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படகுமூலம் வருவோருக்கு புகலிடம் வழங்கப்படாது

## ஆஸி. இலங்கை கூட்டு செயற்குழு உருவாக்கம்

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் வருகின்ற எவருக்கும் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் அவுஸ்திரேலியாவில் புகலிடம் வழங்கப்படமாட்டாது என்று அவுஸ்திரேலிய புலம்பெயர்வு மற்றும் பிரஜைகள் திணைக்களத்தின் பதில் செயலாளர் மார்ட்டின் பொவ்லஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சட்ட ரீதியாக குடிபெயரும் செயற்பாட்டில் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் தற்போது சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் வருகின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனைத் தடுப்பதற்கு இரண்டு நாடுகளுக்கிடையில் தற்போது கூட்டுச் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்படவுள்ளன.

அதனால் படகுகளில் வருவதன் மூலம் ஒருபோதும் மக்கள் தமது இலக்குகளை அடையமுடியாது. உண்மையில் மனிதக் கடத்தல் என்பது ஒரு பாரிய குற்றமாகும்.

அவுஸ்திரேலியாவை பொறுத்தவரை சட்டவிரோதமாக படகுகளில் வருகின்றவர்களைத் தடுக்க தனது முகவர் நிறுவனங்களை சிறந்த முறையில் தயார்ப்படுத்தி வைத்துள்ளது.

சட்டவிரோதமாக வருகின்றவர்கள் தமது நோக்கத்தை ஒருபோதும் அடைந்து விட முடியாது என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வாறு வருகின்றவர்களின் கோரிக்கை எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது. சட்டரீதியான முறையில் வருகின்ற குடிப்பெயர்வுகளை மட்டுமே நாங்கள் பரிசீலிப்போம்.

மாறாக படகுகளில் வருகின்றவர்களை நாங்கள் உடனடியாக நவுறு மற்றும் மானுஸ் தீவுகளுக்கு அனுப்பி விடுவோம் அதன்பின்னர் அவர்களை கட்டாயமாக திருப்பியனுப்புவோம்.

மனுஸ் மற்றும் நவுறு தீவுகளில் உள்ளவர்களில் கடந்த காலங்களில் 120 பேர் தாமாக முன்வந்து நாடு திரும்பினர். ஏனெனில் அந்தத் தீவுகளில் இருப்பதன் மூலம் தாங்கள் அவுஸ்திரேலியாவுக்குள் செல்ல முடியாது என அவர்களுக்குத் தெரியும். அதனால் அவ்வாறான முடிவை அவர்கள் எடுத்தனர் என்றார். (அ-2)

# வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் முத்தமிழ் விழா

(குருமன்காடு)

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான முத்தமிழ் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வவுனியா வெங்கடேஸ்வரா வர்த்தக நிலைய அதிபர் ஆ.இராஜேந்திரன், திருமதி இ.கோகிலவாணி தம்பதியினர் ஏற்றி வைப்பர். வாழ்த்துரையினை மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றத் தலைவர் சிவஸ்ரீ மகாதர்மகுமாரக் குருக் கள் நிகழ்த்துவார்.

தொடர்ந்து தமிழ்ச் சங்கப் பணிகளில் துணை நின்று தமிழ்த் தொண்டாற்றி அண்மையில் அமரத்துவமடைந்த சித்தாந்த வித்தகர் கதிர் சரவணபவன், கலாபூசணம் பொன். தெய்வேந்திரன் ஆகியோருக்கான அஞ்சலி தமிழ் வளர்த்த சான்றோரை தகவுடன் அஞ்சலிப்போம் என்ற மகுடத்தில் இடம்பெறும்.

முத்தமிழில் ஒன்றான இயற்றமிழ்நிகழ்ச்சியாக முத்தமிழின் தலைமைத்தமிழாய் மிளிரப் பெரிதும் தகுதி படைத்தது இயற்றமிழா, இசைத் தமிழா, நாடகத்தமிழா? என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெறும். இதில் கவிச்சிகரம் கி.உதயகுமார், ஆ.லோகேஷ்வரன், கவியெழில் ஜனாப் அப்துல் சமட், சொல்வேந்தன் எஸ்.எஸ். வாசன், கவியெழில் திருமதி த. நிறைமதி, சி.வரதன் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

இசைத்தமிழ் நிகழ்ச்சியாக பண் சுமந்த பாடல் என்னும் பொருளில் இடம்பெறும் இசையரங்கில் திருமதி சிவவதனி பரந்தாமன், தமிழிசையரசி அருந்ததி சிவக்கொழுந்து இருவரும் பாடுகிறார்கள். அணி செய் கலைஞர்களாக வயலின், து.ரமேஷ், மிருதங்கம் , ஞானவேல் வசந் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

நாடகத்தமிழ் நிகழ்ச்சியாக தமிழழகு என்னும் நாட்டிய நாடகம் வவுனியா சிதம்பரஷ்வரம் நர்த்தனாலய நடனப்பள்ளியின் இயக்குநர் கலாவித்தகர் எஸ்.என். செந்தூர் செல்வனின் நெறியாள்கையில் இடம்பெறவுள்ளது. (அ-9-250)

# அரச அங்கீகாரம் பெற்ற காப்புறுதி நிறுவனங்களை இனங்காணுங்கள்

(மல்லாவி)

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களிடம் காப்புறுதி என்ற போர்வையில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஏப்பமிடும் சில காப்புறுதி நிறுவனங்கள் இவர்களுக்கான இழப்பீடுகள் ஏற்படுகின்ற போது கொடுப்பனவுகள் வழங்குவதில் பின்னடிப்பதாக பாதிக்கப்பட்ட பொதுமக்களும் அரச உத்தியோகத்தர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.வன்னியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின் போது எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மீள்குடியேறியுள்ள மக்களிடம் அணுகும் காப்புறுதி நிறுவனங்களின் முகவர்கள் மக்களை ஏமாற்றி காப்புறுதி அங்கத்தவர்களாக்கி விட்டு காப்புறுதி செய்வதவர்களுக்கு இழப்பீடு வரும் போது பல்வேறு சாட்டுக்களை கூறி இழுத்தடிப்பு செய்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

அத்தோடு காப்புறுதி கட்டுப் பணங்களை தொடர்ச்சியாக செலுத்தாது. தவிர்க்க முடியாத காரணங்களால் கைவிடுபவர்களுக்கு அவர்கள் செலுத்திய பணத்தையும் மீளச் செலுத்தவும் மறுப்பதாகவும் தெரியவருகின்றது.

இது தொடர்பாக வன்னி மாவட்டபொது அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் சரியான காப்புறுதி நிறுவனங்களை அரச உத்தரவாதத்துடன் உள்ளவை என இனங்கண்டு இணைவதன் மூலம்இதை ஓரளவு தவிர்க்க முடியுமெனவும் தங்கள் வீடுகளுக்கு காப்புறுதி முகவர் என்ற போர்வையில் வருகை தரும் போலி முகவர்கள் பற்றி அருகில் உள்ள கிராம சேவகரிடமோ அல்லது பொலிஸாரிடமோ தகவல் வழங்கி உதவுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# மதுபான நிலையங்களை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மன்னார் சௌத்பார் பிரதான வீதியில் அமைந்துள்ள இரண்டு மதுபானசாலைகள் மற்றும் கள் விற்பனை நிலையம் என்பவற்றை உடன் அகற்றுமாறு கோரி மன்னார் பனங்கட்டுக்கொட்டு மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

மன்னார் பனங்கட்டுக்கொட்டு பிரதான வீதியில் ஒன்று கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு குறித்த மதுபானசாலைகளை அகற்றக் கோரி கோசங்களை எழுப்பியவாறு சௌத்பார் பிரதான வீதியூடாக சென்றனர்.

இந்நிலையில் மன்னார் நகர சபையின் அனுமதியின்றி மன்னார் சௌத்பார் பிரதான வீதியில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு புதிய மதுபானசாலை திறக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அதனை மூடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள பொலிஸாருக்கு மன்னார் நகரசபை கடிதம் ஒன்றை உடன் அனுப்பி வைத்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட குறித்த மதுபானசாலை சகல தரப்பினருடைய அனுமதிகளை பெற்றுள்ள போதும் மன்னார் நகர சபையிடம் அனுமதி பெறவில்லை என மன்னார் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மதுவரித் திணைக்களம் தெரிவிக்கையில், எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மட்டுமே குறித்த இரண்டு மதுபான விற்பனை நிலையங்களிலும் போத்தல்கள் விற்பனை நிலையத்திலும் அவை விற்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அவ்விடத்தில் மதுபானப் பொருட்கள் விற்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படாது எனவும் உறுதியளிக்கப்பட்டது. (அ-2)




★1768-நேபாளம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்றுவரையுள்ள நாடு தோற்றுவிக்கப்பட்டது.

★1902-இலங்கையில் போவர் போர்க் கைதிகளாக இருந்தவர்கள் தென்னாபிரிக்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

★1913-உலகின் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி நியூயோர்க் வேர்ல்ட் பத்திரிகையில் வெளியானது.

★1967-உலகின் முதலாவது இருதயமாற்றுச் சிகிச்சை பெற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லூயிஸ் நாஷ்கான்ஸ்கி சிகிச்சை பெற்று 18 நாட்களின் பின்னர் இறந்தார்.

★1968-சந்திரனுக்கான மனிதனை ஏற்றிச் சென்ற விண்கலம் அப்பல்லோ 8 புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பைத் தாண்டிச் சென்ற முதலாவது மனித விண்கலம் இதுவாகும்.

★1971-ஐ.நா. அவையின் பொதுச் செயலாளராக கூர்ட்வார்ல்ட் ஹெயிம் தெரிவானார்.

★1973-அரபு- இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஜெனீவா மாநாடு ஆரம்பமானது.

★1979-ரொடீசியாவின் விடுதலைக்கான உடன்பாடு லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.

★1988-ஸ்கொட்லாந்தில் லொக்கர்பி என்ற இடத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானத்தில் குண்டு வெடித்ததில் 270 பேர் உயிரிழந்தனர்.

★1991-கசகஸ்தானின் அல்மா- ஆட்டா நகரில் கூடிய பதினொரு சோவியத் குடியரசுகளின் தலைவர்கள் தனி நாடுகளின் பொதுநலவாய அமைப்பு உருவாகியவுடன் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் என அறிவித்தனர். இதன்படி டிசெம்பர் 26 ஆம் நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.

★1992-டச்சு விமானம் ஒன்று போர்த்துக்கலில் வீழ்ந்ததில் 56 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1995-பெத்லகேம் நகரம் இஸ்ரேலியர்களிடம் இருந்து பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

★2007- பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் மசூதி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 50 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★1878-ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ.1953)

★1942-ஹூ சிங்தாவ், சீன மக்கள் குடியரசின் தலைவர்

★1948-சாமுவேல் ஜாக்சன், அமெரிக்க திரைப்பட நடிகர்

★1963-கோவிந்தா, இந்திய நடிகர்

### இறப்புக்கள்

★2006- வரதர்,ஈழத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளர் (பி.1924)

★2008-கே. இந்திரகுமார், ஈழத்து எழுத்தாளர், நடிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலங்களை அபகரிக்க முடிந்தாலும் மனங்களை அபகரிக்க முடியாது !

**சண்டேலீடர் ஆங்கில வார இதழில் நிரஞ்சலா ஆரியசிங்கவும் கிரிசாந்தி கிறிஸ்தோபரும் இணைந்து எழுதி யுள்ள கட்டுரையிலிருந்து...**

இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளும் ஏழு மாதங்களும் கடந்த நிலையில்கூட வடக்கு- கிழக்கில் வாழும் பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு இன்னமும் திரும்பிச் செல்லமுடியாத நிலையில் வாழ்வதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அழுத்தம் கொடுத்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த 84,000 மக்களும் திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 6000 மக்களும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாது, தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்கின்ற நிலையிலேயே இருக்கின்றனர்.

இவர்கள் தவிர இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களில் 150,000 பேர் இன்னமும் அங்குள்ள அகதி முகாம்களில் வாழ்வருகின்றனர். இவர்கள் இலங்கைக்கு திரும்பி வருவதில் விருப்பங் கொண்டிருந்தாலுங்கூட அடிப்படை வசதிகளைக்கூட நிறைவேற்ற முடியாத வெற்றுக் காணிகளில் இவர்கள் குடியேற்றப்படுவதற்கான அனுமதிகூட மறுக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் இந்திய அகதிமுகாம்களில் வாழ்கின்றனர்.

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் என்று எவரும் இல்லை என இந்நாட்டு அரசாங்கம் தொடந்தும் அறிவிக்கின்றது. கடந்த ஒக்டோபரில் இறுதி இடம்பெயர்ந்த முகாமும் மூடப்பட்டு விட்டதாகவும் வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் மிகப்பாதுகாப்பாக மீள்குடியேற்றப்பட்டதாகவும் இந்நாட்டு அரசாங்கம் தெரிவித்திருந்தது.

மீள்குடியேற்ற விடயம் பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாக கடந்தமாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற பூகோளகால மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

இதன் காரணமாக மெனிக் பாம் முகாமில் இறுதியாக எஞ்சியிருந்த 6000 வரையான மக்களை சீனியாமோட்டை என்கின்ற காட்டுப்பகுதியில் இலங்கை அரசாங்கம் அவசர அவசரமாக குடியேற்றியது. இதன்மூலம் அனைத்துலக சமூகத்தை நம்பவைக்க முடியும் என இலங்கை அரசாங்கம் கருதியது.

இந்த மக்கள் தாம் தற்போது தங்கியிருக்கும் சீனியமோட்டை காட்டுப் பகுதியிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்திலுள்ள தமது சொந்தக் காணிகளில் எப்போது மீள்குடியேற்றப்படுவோம் என் காத்திருக்கின்றனர். யுத்தத்தின் விளைவால் உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தொடர்ந்தும் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் வாழ்கின்றனர். மீள்குடியேற்றம் என்பது வெறுங்காடுகளில் இறக்கிவிடுவதை குறிக்கின்றதா? என பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வடக்கில் எந்தவொரு இடம்பெயர்ந்தோர் முகாம்களும் காணப்படவில்லை என்பது இலங்கைஅரசாங்கத்தின் வாதமாகும். ஆனால், யாழ்ப்பாணத்தில் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களும் நலன்புரி நிலையங்களும் காணப்படுகின்றன. இவற்றை இலங்கை அரசாங்கம் 1996 ஆம் ஆண்டிலிருந்து நிர்வகித்து வருகிறது. இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் இந்த முகாம்களில் வாழ்கின்றனர் எனவும் தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் வடக்கில் மீள் குடியேற்ற நடவடிக்கை முடிவடைந்து விட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால், இது முற்றிலும் பொய்யான தகவலாகும். யாழ்ப்பாணத்தில் 26 ஆண்டுகால பழமை வாய்ந்த 11 நலன்புரி நிலையங்கள் காணப்படுகின்றன. இந்த முகாம்களில் தற்போது நூறாயிரம் மக்கள் வரை வாழ்கின்றனர். இவற்றை இலங்கை அரசாங்கமே நிர்வகிக்கின்றது.

ஆனால், இவற்றை அரசாங்கம் வெளியில் தெரிவிக்கவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பலர் இன்னமும் தமது உறவுகளினதும் நண்பர்களினதும் வீடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் ஒன்றுக்கும் பயன்படாத வெற்றுக் காணிகளில் வாழ்கின்றனர்

இலங்கை அரசாங்கம் காலத்திற்குக் காலம் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பெயர்களை மாற்றுவதன்மூலம் வெளியுலகில் இவ்வாறான எதுவும் இல்லை என்பதை நம்பவைக்க முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தல் 24 கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் குடியேற்றப்படவில்லை. இவற்றை இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இங்கு மக்கள் குடியேற்ற அனுமதிக்கப்படவில்லை. இக்கிராமசேவைப் பிரிவுகள் இராணுவத்தாலோ அல்லது இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புடையவர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இத்தகைய பிரச்சினை நிலவுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து நிர்க்கதியான நிலையில் உள்ளபோதிலும் இவர்கள் தமக்கான வாழ்விடத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது துன்பப் படுகின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள பரவிப் பாஞ்சன் என்னும் கிராமத்தில் முன்னர் விடுதலைப்புலிகளின் அரசியல் செயலகம் காணப்பட்டது. பொதுமக்கள் இங்கு செல்வதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் முகாமுக்கு பதிலாக தற்போதுஇராணுவ முகாம் காணப்படுகின்றது. இதனால் மீண்டும் மக்கள் அங்கு வாழ முடியாத நிலையில் உள்ளனர்.

மன்னாரில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் 100 வரையான மீனவ மற்றும் விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்தனர். ஆனால், தற்போது இாணுவத்தினர் இந்தக்கிராமம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர். இந்த மக்களை வேறு இடங்களில் குடியேறுமாறு இராணுவத்தினர் பணித்தனர்.

இந்நிலையில் தற்போது இந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்ட இடத்தில் தமது பாரம்பரிய வாழ்வாதரத்தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மக்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த இரண்டு இலட்சம் மக்கள் மீள் குடியேற்றப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இருந்தபோதிலும் இந்தப் புள்ளி விபரங்களை இலங்கை அரசாங்கமே தயாரிக்கின்றது. இதனால், இவற்றை நாம் முற்று முழுதாக நம்ப முடியாது. இலங்கையில் மீள்குடியேற்ற அமைச்சு உள்ள போதிலும் மக்களின் மீள் குடியேற்றத்தை இலங்கை இராணுவத்தினரே மேற்கொள்கின்றனர் எனத்தெரிய வருகின்றது.

எது எவ்வாறாயிருப்பினும் த.தே.கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட இதுபற்றிய குற்றச்சாட்டை இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரியா மறுத்துள்ளார்.

"நாங்கள் மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதாக த.தே.கூட்டமைப்பு கருதுகிறது. மீள்குடியேற்றமானது மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கையில் எமது உதவியையும் சம்பந்தப்பட்ட அதகாரிகள் கோரும் இடத்தே நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளில் தலையீடு செய்கிறோம்'' என பிரிகேடியர் வணிக சூரியர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை 1996 இல் பலாலி விமானப் படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்குச் சொந்தமான 84 ஆயிரம் மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இவர்கள் சார்பாக 2003 இல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்றை செய்துள்ளார்.

"நீதிமன்றக் கட்டளையின்படி இந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் சிலர் படிப்படியாக அவர்களது இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியும்'' என அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னமும் இந்தப்பகதியைச் சேர்ந்த 28 ஆயிரத்து 270 வரையான குடும்பங்கள் தமது சொந்தக் காணிக்குள் செல்லமுடியாது வாழ்கின்றனர்.

நீதிமன்றில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பலாலி விமானப் படை முகாம் அமைந்த காணிகளின் உரிமையாளர்கள் தொடர்பான விபரம் சரியாகக் காணப்பட்டது. ஆனால், இந்தக்காணிகளில் இலங்கை இராணுவத்தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற [illegible]க்குச் சொந்தமான ஆயிரக்கண[illegible] நிலங்களை இலங்கை அரசாங்கம் எவ்வாறு சுவீகரிக்க முடியும்?

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 33 மில்லியன ரூபாக்களை செலவிடவுள்ளதாக இலங்கை அரசாங்கம் அந்த நேரத்தில் அறிவித்துள்ளது. இவ்வாறான பெரும்தொகை நிதியை அரசாங்கம் ஏன் செலவிடவேண்டும். இந்த மக்கள் அவர்கள் சொந்த இடங்களுக்கு திழரும்பிச் செல்வதை அனுமதித்திருந்தால் இலங்கை அரசாங்கம் 33 மில்லியன் ரூபாய்களை சேமித்திருக்க முடியாதா?

"இவ்வாண்டு ஜனவரி மாதத்திலிருந்து இலங்கை இராணுவம் பலாலி விமானப்படை முகாமை சுற்றி முள்வேலிகள் அமைத்திருக்கிறது. இதுதொடர்பாக நாம் சட்டமா அதிபரிடம் வினவிய போது இதுதொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என அவர் கூறினார். நாங்கள் இதன் ஒளிப்படங்களை அவரிடம் காண்பித்தோம் ஆனால், இதற்கான பதில் எமக்குக் கிடைக்கவில்லை. பலாலிபோன்று வடக்குக் கிழக்கில் பெருமளவான நிலங்கைள இலங்கை இராணுவம் சுவீகரித்துள்ளது'' என த.தே.கூட்டமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் போரின் பாதிப்பால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி புத்தளம், கொழும்பு, அநுராதபுரம், பாணந்துறை போன்ற இடங்களில் வாழ்ந்த மக்கள்- அண்மையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிய மக்கள்- அழிவடைந்த தமது நிலங்களில் தமக்கான புதுவாழ்வை ஆரம்பிப்பதில் பெரும் பிரயத் படுவதாக இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ஹசன் அலி குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முடிவடைந்துவிட்டதாகஇலங்கை அரசாங்கம் அறிவித்தபோதிலும் வடக்கு கிழக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதன் காரணம் என்ன? யுத்தம் உண்மையில் முடிவடைந்திருந்தால், வடக்கில் வாழும் மூன்று பொது மக்களுக்கு ஒரு இராணுவத்தினன் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன? இது தொடர்பில் த.தே.கூட்டமைப்பு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்துவருகிறது.

புனிதமான அரசாங்கம் தமிழ்மக்களின் பாதுகாப்பில் இவ்வளவு அக்கறை காட்டுவதன் இரகசியம் என்ன? சிங்கள மக்களுக்கு வழங்காத இவ்வாறானதொரு சலுகையை இலங்கை அரசாங்கம் வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டும் காட்டுவதன் காரணம் என்ன?

"யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து மீள்குடியேற்றம்வரை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் மோசடியை மட்டுமே செய்கிறது'' என கல்வித்துறை சார் அறிஞர்கள் பேசுகிறார்கள்.

"வடக்கில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் காலையில் எழும்போது இலங்கை இராணுவத்தினனை அல்லது அவனது துப்பாக்கியிலேயே விழிக்கின்றான்.

வடக்கில் வாழும் தமிழ்மக்களின் நிலங்களை இலங்கை இராணுவத்தை பயன்

**புதினப்பலகை**

படுத்தி அரசாங்கம் அபகரிப்புச் செய்யலாம். ஆனால், இந்த வழியில் எமது மனங்களை ஒருபோதும் இலங்கை அரசாங்கம் அபகரித்துவிட முடியாது'' என சமுகப் பொறுப் புணர்வுடைய கல்விசார் அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் ஆளுமை விருத்தியும் வாழ்க்கை ஆற்றல்களும்

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

❖ எம்மை அறியாமலே குழந்தைப் பருவம், சிறுவர் பராயம் போன்ற பல்வேறு வயதெல்லைகளில் சூழலிலிருந்தும் பெற்றோரிடமிருந்தும் பற்பல வாழ்க்கை ஆற்றல்களை நாம் அனுபவங்களாகப் பெறுகின்றோம்.

❖ விழிப்புணர்வுடன் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும் காரியங்கள் செயற்பாடுகள் மூலமாகவும் பல வாழ்க்கை ஆற்றல்களை நாம் பெறுகின்றோம்.

❖ முறைசார் வாழ்க்கை ஆற்றல்கள் கல்வி மூலம் வாழ்க்கை ஆற்றல்களைக் கிரமமாகக் கடைப்பிடிப்பது எப்படி என்னும் விளக்கத்தைப் பெறலாம்.

இங்கு ஒரு சிறுவர் சமுதாயத்திலிருந்து பெறும் அறிவு, ஞானம் தூண்டப்படுவதுடன் பொதுசனத் தொடர்பூடகங்கள், பாடசாலைகள் மற்றும் பலவித மனிதர்களும் வாழ்க்கை ஆற்றல்கள் விருத்திக்குத் துணை நிற்பார்கள். இலங்கைப் பாடசாலை பாட விதானத்துடன் வாழ்க்கை ஆற்றல்கள் சிபாரிசு செய்யப்பட்டு கற்பிக்கப்படுகின்றது. நண்பர்களைத் தேர்தல், சம வயதுடையோரின் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தல், புது இளமைப்பராயத்தில் ஏற்படும் காதல், சிநேகம், ஆவேசங்கள் என்பவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் வயதிற்கேற்ப தீர்மானமெடுத்தல் என்னும் நிலைகளில் வாழ்க்கை ஆற்றல்களை உபயோகப்படுத்துதல் முக்கியமானதாகும்.

உலக சுகாதார நிறுவனமானது (World Health Organization) சிறுவர்கள் சவால்களை எதிர்கொள்ளவும் சிறுவர்களிடத்தே விருத்தி செய்து கொள்ள வேண்டிய வாழ்க்கை ஆற்றல்களாக பின்வருவனவற்றைக் கூறியுள்ளது. இவ்வாறான ஆற்றல்களை எமது மாணவப் பருவ காலத்திலேயே விருத்தி செய்து கொள்வது இன்றியமையாததாகின்றது.

**1) தீர்மானமெடுத்தல்**

சிறுவர்கள் தமது வாழ்க்கை விருத்திக்கு தீர்மானமெடுத்தல் என்பது முக்கியமானது. தனக்குள் விருத்தி செய்யப்பட வேண்டிய திறமைகளுடன் செயற்பாடுகள் தொடர்பான பகுத்தறிவையும் கொண்டு தீர்மானமெடுத்தல் வேண்டும். சிறுவர்களது தனித் தீர்மானம் எடுத்தலைத் தவிர்த்து ஏனையோருடன் கலந்தாலோசித்து எடுக்கும் தீர்மானங்கள் சிறப்பானதாக அமையும்.

**2) பிரச்சினை தீர்த்தல்**

சிறுவர்கள் மத்தியில் பிரச்சினை தீர்த்தல் திறன் இன்றியமையாதது. உறவுகள் மத்தியில் சிறப்பான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு பிரச்சினையற்ற சூழல் இன்றியமையாதது. பிரச்சினை ஏற்படுமிடத்து சிறுவர்கள் அதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை ஆராய்ந்து அதற்கான பல முடிவுகளை முன்வைத்து சிறப்பான ஒரு முடிவை எடுத்தல் வேண்டும்.

**3) ஆக்கபூர்வ சிந்தனை**

ஆக்கபூர்வ சிந்தனை என்பது புதிய எண்ணக்கருக்களை கொண்டு வருவதாகும். சிறுவர்கள் புதிய எண்ணங்களை தமது நடைமுறை வாழ்வில் இணைப்பதன் மூலம் அவர்களது வெளியீடு ஆக்கபூர்வமானதாக அமையும். இதனால் சிறுவர்களது சிந்தனை ஆற்றலும் விருத்தி செய்யப்படும்.

**4) பகுத்தறியும் சிந்தனை**

சிறுவர்கள் தமது எண்ணங்கள், நோக்கங்கள் என்பவற்றுடன் வினைத்திறனான செயற்பாட்டிற்கு அவர்களது பகுத்தறியும் சிந்தனை இன்றியமையாதது.

பகுத்தறியும் சிந்தனை மூலம் சிறுவர்கள் நல்லது எது? கெட்டது எது? எனத் தீர்மானிப்பதுடன் பிழையற்ற முடிவுகளையும் எடுப்பதற்கு இலகுவானதாகும். பிள்ளைகள் தொடர்பு சாதனங்களைப் பார்க்கும் போது பெற்றோர்களுடன் சேர்ந்து பார்த்தல் இன்றியமையாதது. அவ்வாறான வேளைகளில் தான் சரி, பிழை, நன்மை, தீமை போன்ற விடயங்களை ஒருவரோடு ஒருவர் கலந்துரையாடி அவர்களுக்கான சிறப்பான வழிகாட்டுதல்களை மேற்கொள்ள முடியும்.

**5) பயன்மிகு தொடர்பாடல்**

மாணவர்கள் பாடசாலை சென்று கல்வி கற்பதற்கு பயன்மிகு தொடர்பாடல் இன்றியமையாதது. பயன்மிகு தொடர்பாடல் என்பது சிறுவர்கள் தகுந்த முறையில் வாய்மொழிமூலமோ அல்லது வாய்மொழியற்ற உடலசைவுகள் மூலமோ தமது கருத்துக்களை வெளியிடுவதுடன் மற்றவர்களது கருத்துக்களையும் அறிந்து அவற்றைச் செவிமடுக்க வேண்டும். இதனால் சிறுவர்கள் தமது கருத்துக்களைப் பிழையின்றி தெளிவாக எளிய முறையில் இலகுவாக விளங்கக்கூடிய ரீதியில் வெளியிடுவார்கள்.

**6) உகந்த ஆளிடைத் தொடர்புகள்**

ஒரு சிறுவனுக்கும் இன்னொருவனுக்குமிடையே ஏற்படும் பரஸ்பர இணக்கத்துடனும் பழகி தன்னுள் விருத்தி செய்யும் திறமையாகும். சிறுவர்கள் பாடசாலையில் உகந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவது இன்றியமையாதது. சிறுவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது வரவேற்றல், வணக்கம் கூறுதல், சிரித்த முகத்துடன் பழகுதல், ஒத்துழைப்பு, நட்புணர்வுடன் செயற்படுதல் என்பன முக்கியமான பண்புகளாகும்.

சிறுவயதிலேயே ஏனையோருடன் பழகுகின்ற பொழுது ஆசார சீலங்களைப் பேண வழிகாட்டுவது முக்கியமானது. தயவு செய்து மன்னிக்கவும், வணக்கம் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தகுந்த இடத்தில் பிரயோகிப்பதற்கு சிறுவர்களை நெறிப்படுத்த வேண்டியது முக்கியமானது.

**7) தன்னைப் புரிந்து கொள்ளல்**

ஒவ்வொரு சிறுவர்களும் தம்மைத் தாமே சமய ஆராய்ச்சி செய்து தம்மை இனங்கண்டு கொள்வது இன்றியமையாதது. தனக்குள்ள ஆற்றல்கள், செயற்றிறன்கள், உணர்ச்சிகள், எதிர்பார்ப்புகள், விருப்பு, வெறுப்புகள், எதிர்மறை எண்ணங்கள் போன்றவற்றை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும். ஒவ்வொரு சிறுவனும் தனக்கே உரிய ஒரு தனித் திறமையைக்கொண்டுள்ளான். அவன் தன்னை மதிப்பீடு செய்து தனது வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும்.

**8) உணர்வு கொள்ளுதல்**

ஒவ்வொரு சிறுவரும் தங்கள் உணர்ச்சிகளை தாம் எவ்வாறு உணர்கின்றார்களோ அவ்வாறே மற்றவர்களது உணர்ச்சிகள், தேவைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். இவ்வாறான ஆற்றல்கள் மூலம் மாணவர்கள் தாமும் தமது சகபாடிகளும் ஒருமித்து சமாதானமாக மோதல்கள் இன்றி வாழ முடி யும். கோபம், வெறுப்பு, மனம் புண்படு தல் போன்றன சிறுவர்களிடம் காணப்ப டாது உன்னதமான வாழ்க்கையை வாழ இடங் கொடுப்பதாய் அமையும்.

**9) மன எழுச்சிகளை எதிர்கொள்ளல்**

மன எழுச்சிகள் ஒவ்வொரு உயிருக்கும் உள்ள பொதுவான இயல்பாகும். இது அவர்களின் செயற்பாட்டினடிப்படையில் ஒருவருக்கொருவர் வேறுபடும். சிறுவர்கள் தமதும் மற்றவர்களதும் மனவெழுச்சிகளை அறிவதற்கும் அவற்றால் ஏற்படும் நடத்தை மாற்றங்களுக்கு ஏற்ப செயற்படவும் முடிகின்றது. கோபம், சந்தோசம், மலர்ச்சி, துக்கம், பயம் போன்ற பல்வேறு விதமான எழுச்சிகள் காணப்படுகின்றன. இம் மனவெழுச்சிகளை இனங்காண்பதுடன் மன எழுச்சிகளை சிறந்த முறையில் கையாள்வதற்கான பக்குவம் ஒவ்வொரு சிறுவர்கள் மத்தியிலும் உருவாக வேண்டும். மனவெழுச்சிகள் சிறந்த ஆரோக்கியத்திற்கு உதவுபவையாக உள்ளவற்றை மாற்றத் தேவையில்லை. எதிர்மறையான மனவெழுச்சிகள் சிறந்த ஆரோக்கியத்திற்கு உதவுபவை உள்ளவற்றை மாற்றத் தேவையில்லை. எதிர்மறையான மன எழுச்சிகளை சிறந்த முறையில் கையாள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

சிறுவர்கள் மனவெழுச்சிகளை கையாள்வதற்கு தியானம், உடற்பயிற்சி செய்தல், பாட்டுப்பாடல், வாத்தியம் மீட்டல், ஆக்கபூர்வ செயல்களில் ஈடுபடல் போன்றவற்றில் ஈடுபடலாம்.

**10) மனநெருக்கீடுகளை எதிர்கொள்ளல்**

மனதில் ஏற்படும் அழுத்தங்களைக் கண்டறிந்து அவ்விளைவுகளைத் தணிக்க வேண்டியது இன்றியமையாதது. சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் மன நெருக்கீடுகள் என்பது உடல், உள, சுற்றாடல் காரணிகளால் மனதில் அமைதியற்ற நிலை ஏற்படுதலாகும். இன்றைய சூழ்நிலையில் பல சிறுவர்கள் மன நெருக்கீடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

சிறுவர்கள் தமக்கு ஏற்படுகின்ற மன நெருக்கீடுகளை இனங்காண்பதுடன் அதனைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இலக்கங்களை எண்ணுதல், தன்னடக்க உடற்பயிற்சி செய்தல், பூந்தோட்டம் அமைத்தல், புத்தகம் வாசித்தல், மற்றவர்களுக்கு உதவுதல், பாட்டுப்பாடுதல், நடனம் ஆடுதல், வாத்தியங்களை மீட்டுதல், இயற்கையை இரசித்தல், விளையாடுதல் போன்றவற்றுள் தமக்கு உரியதான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சிறுவர்கள் தமது மன மனநெருக்கீடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அனோஜனா சிறிமகாதேவன்
மாவட்ட சிறுவர் அபிவிருத்தி
அலுவலகம், மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

இவ்வாறு ஒவ்வொரு சிறுவர்களிடமும் ஒவ்வொரு ஆளுமைப் பண்புகள் காணப்படும். அவர்கள் தமது ஆளுமையை இனங்காண்பதுடன் ஆளுமையை விருத்தி செய்வதும் இன்றியமையாதது. சிறுவர்களது ஆளுமை சிறுவயதிலே இனங்காணப்படுவதுடன் அவற்றின் விருத்திக்கு குடும்பம், சமூகத்தின் பங்கு முக்கியமானது. மேலும் வாழ்க்கை ஆற்றல்களை சிறப்பாகக் கையாள்வதன் மூலம் சிறுவர்களது ஆளுமை வளர்வதுடன் எதிர்காலத்திலும் சிறந்த சமூகப்பிரஜைகளாக வாழ்வதற்கு வழிவகுக்கின்றது என்றால் மிகையாகாது. (முற்றும்)

# மீன், இறால் மழையை அடுத்து முதலை மழை?

நாட்டின் சில பகுதிகளில் மீன் மழை பெய்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. தற்போது மழையுடன் முதலைக்குட்டியொன்று வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. திஸ்ஸ மஹாராம பிரதேசத்தில் அண் மையில் மழையுடன் இறால்கள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது மாத்தறை சுல்தானாகொடகெகில்ல பிரதேசத்தில் பாரிய மழையுடன் முதலைக் குட்டியொன்று வீழ்ந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கே.பியதிஸ்ஸ என்பவரின் வீட்டுக் கிணற்றிற்கு அருகாமையில் இந்த முதலைக்குட்டி வீழ்ந்துள்ளது. இந்தக் கிராமத்திற்கு அருகாமையில் முதலைகள் வாழும் எந்தவொரு குளமோ அல்லது வேறு நீர் நிலைகளோ கிடையாது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கிராமத்திற்கு இதற்கு முன்னர் முதலைகள் வந்ததில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பிரிட்டன் பிரஜை கொலை வழக்கு மந்தகதியில் நடைபெறுகின்றது

## பிரிட்டன் எம்.பி. சிமோன் குற்றச்சாட்டு

உள்ளூர் அரசியல்வாதியை பாதுகாக்கும் நோக்கில் தங்காலையில் பிரிட்டன் பிரஜை ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் மந்தகதியில் நடைபெறுவதாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிமோன் டன்சியுக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நத்தார் பண்டிகைக் காலத்தில் செஞ்சிலுவைச் சங்க ஊழியரான குர்ஹம் சாகீயா என்ற பிரிட்டன் பிரஜை போத்தலினால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். இந்த வழக்குடன் உள்ளூர் அரசியல்வாதிக்கு தொடர்பு காணப்படுவதனால் அரசாங்கம் விசாரணைகளை உரியமுறையில் நடத்தவில்லை.

சம்பவம் இடம்பெற்று ஓராண்டு காலம் கடந்த நிலையிலும் வழக்கு விசாரணைகளில் முன்னேற்றமில்லை. கைது செய்யப்பட்டவர்களில் எட்டு பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் தலையீடு காரணமாக விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு அதிகளவான பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்கின்றனர். குர்ஹாமிற்கு நேர்ந்த நிலைமை மற்றுமொரு பிரிட்டன் பிரஜைக்கும் இடம்பெறலாம்.

விசாரணைகள் உரியமுறையில் நடத்தப்படாவிட்டால் பிரித்தானியப் பிரதமர் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாது என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (அ-2)



கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவர்களும் மற்றும் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இம் மாணவர்கள் சிறப்பு விருந்தினர், அதிபர், கற்பித்த ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அதிவேக சுப்பர் பைக்குகள்


அதிவேக சூப்பர் மோட்டார் சைக்கிள்களை தயாரிப்பதில் ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. சுஸுகியின் கவாஸாகி யமஹா, ஹோண்டா என ஜப்பானிய நிறுவனங்கள் ஒரு பக்கமும், பிஎம்டபிள்யூ மோட்டராடு, எம்வி அகஸ்ட்டா மற்றும் டுகாட்டி என ஐரோப்பிய நிறுவனங்கள் மறுபக்கமும் சூப்பர் பைக் மார்க்கெட்டில் போட்டிபோட்டு வருகின்றன. கண் இமைக்கும் நேரத்தில் கடந்து போகும் ஆற்றல் வாய்ந்த அதிவேக பைக்குகள் குறித்து அறிந்து கொள்ள அனைவருக்கும் ஆவல் இருப்பது இயற்கையே. இந்த செய்தித் தொகுப்பில் உலகின் அதிவேக சூப்பர் பைக்குகள் குறித்த தகவல்களை காணலாம்.

### 1. சுஸுகி ஜிஎஸ்எக்ஸ்-ஆர் 1000




சுஸுகியின் பிரபலமான இந்த மோட்டார் சைக்கிள் 160 பிஎச்பி ஆற்றலை வெளிப்படுத்தும் 4 சிலிண்டர்கள் கொண்ட 999சிசி எஞ்சின் பொருத்தப் பட்டுள்ளது. அதிகபட்சமாக மணிக்கு 285 கிமீ வேகத்தில் செல்லும் திறன் வாய்ந்தது.

### 2. ஹோண்டா சிபிஆர் 1000 ஆர் ஆர்




இந்த மோட்டார் சைக்கிளை ஃபயர்பிளேடு என்றும் அழைக்கின்றனர். சிபிஆர் வரிசையில் 998சிசி எஞ்சின் கொண்ட இந்த பைக் மணிக்கு அதிகப்ட்சம் 291 கிமீ வேகத்தில் செல்லும் ஆற்றல் வாய்ந்தது

### 3. யமஹ்றா ஒய்இசட்எப்-ஆர்1




சிறந்த கையாளுமை கொண்ட இந்த மோட்டார் சைக்கிளை 998 சிசி எஞ்சின் பொருத்தப் பட்டுள்ளது. மணிக்கு அதிகபட்சமாக 297 கிமீ வேகம் வரை செல்லு.

### 4. கவாஸாகி நிஞ்சா இசட்இசட்ஆர் 1400




மிரட்டலான தோற்றம் கொண்ட இந்த மோட் டார் சைக்கிள் 1352சிசி எஞ்சின் பொருத்தப் பட்டுள்ளது. இந்த பைக் அதிகபட்சம் மணிக்கு 299கிமீ வேகத்தில் செல்லும்.

### 5. டுகாட்டி 1199 பனிகேல்




டுகாட்டி மோட்டார் சைக்கிள்களுக்கு சர்வதேச அளவில் அதிக ரசிகர்கள் உண்டு. இந்த பைக்கில் 196 பிஎச்பி ஆற்றலை வெளிப் படுத்தும் 1199 சிசி எஞ்சின் பொருத்தப் பட்டுள்ளது. மணிக்கு அதிகபட்சமாக 300 கிமீ வேகம் வரை செல்லும் திறன் கொண்டது.

### 6. பிஎம்டபிள்யூ எஸ் 1000ஆர்




டுகாட்டியின் நேரடி போட்டியாளர்தான் இந்த சூப்பர் பைக். ஏபிஎஸ் பிரேக்கிங் சிஸ்டம், எலக்ட் ரிக் எவொலியூசன் கன்ட்ரோல் சிஸ்டம் உள் ளிட்ட நவீன தொழில்நுட்ப கட்டுப்பாட்டு அமைப்பு களை பெற்ற இந்த சூப்பர் பைக்கில் 999சிசி எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மணிக்கு 305கிமீ வேகம் வரை செல்லும் ஆற்றல் வாய்ந்தது.

### 7. எம்வி அகஸ்ட்டா எஃப்3 தம்புரினி




அழகான சூப்பர் பைக்குகள் என வர்ணிக்கப் படும் எம்வி அகஸ்ட்டா பிராண்டின் எஃப்3 தம்பு ரினியின் வடிவமைப்பு அனைவரையும் கவ ரும். இந்த பைக்கில் 128 பிஎச்பி ஆற்றலை வெளிப படுத்தும் எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது. இந்த பைக்கின் அதிகபட்ச வேகம் மணிக்கு 307 கிமீ.

### 8. எம்வி அகஸ்ட்டா எஃப்-4 ஆர்-312




உலகின் மிக அதிகவேக பைக்குகளில் இதுவும் ஒன்று. இதில், எம்வி அகஸ்ட்டா எஃப்4 ஆர்312 மாடல் மணிக்கு 314 கிமீ வேகத்தில் செல்லும் ஆற்றல் வாய்ந்தது.

### 9. சுஸுகி ஹயபுசா




சுஸுகியின் பிரபலமான இந்த பைக்கில் 162 பிஎச்பி ஆற்றலை வெளிப்படுத்தும் எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது. இதன் அதிகூடிய வேகம் மணிக்கு 320 கிமீ.

### 10. எம்டிடி டர்பைன் சூப்பர்பைக் ஒய்2கே



இந்த பைக்கில் சாதாரண எஞ்சினுக்கு பதிலாக ரோல்ஸ்ராய்ஸின் ஹெலிகாப்டர் எஞ்சின் பொருத் தப்பட்டுள்ளது. இந்த எஞ்சின் 300 பிஎச்பி ஆற்றலை வெளிப்படுத்தும். மணிக்கு [illegible] வேகம் வரை சீறிப்பாயும் திறன் கொண்டது.



# இன்னும் 5 வருடங்களில் மனிதவேடம் தாங்குகிறதா கணனி?

உலக அரங்கில் IBM என்ற தொழில்நுட்ப நிறுவனத்தைப்பற்றி அறிந்திராதவர்கள் கணிப்பொறியைப் பற்றித்தெரியாதவர்கள் என்றே சொல்லவேண்டும். இந்நிறுவனம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க முனைந்துள்ளது. அதாவது நம் வாழ்க்கையின் மற்றொரு பரிணாமத்திற்கு தொழில்நுட்பங்கள் மூலமே அழைத்துச்செல்லும் என்றே தோன்றுகிறது.

அப்படியென்னதான் புதிய தொழில்நுட்பங்கள் என்கிறீர்களா?

ஒரு கணினியினால் மனிதனைப்போன்றே பார்க்க முடியும், நுகரமுடியும், தொடமுடியும், சுவைக்கமுடியும் மற்றும் கேட்கவும் முடியுமென்றால் நம்பமுடிகிறதா? ஆம்! இதைத்தான் செய்யப்போகிறது IBM இன் புதிய தொழில்நுட்பங்கள்.

IBM இந்தியாவின் ஆராய்ச்சிக்கூடத்தில் தலைவராகப் பணிபுரியும் திரு.ரமேஷ் கோபிநாத் இதை உறுதிசெய்துள்ளார்.

### தகவல்களை புகைப்படமாக மாற்றும்

இன்னும் 5 வருடங்களில் கணினிகள் வெறும் செய்திகளை மட்டும் புரிந்துகொள்ளாது. மேலுமிது புகைப்படங்கள் மற்றும் பார்க்கும் வகையிலான தகவல்கள் அனைத்தையும் ஏதாவதொரு பொருள் தரக்கூடிய புகைப்படமாக மாற்றும்.

வருங்காலத்தில் மனித மூளையப்போன்ற செயல்திறன்கொண்டதாக இந்த தொழில்நுட்பம் உருவாக்கப்படும். இதனால் வண்ணம், வடிவம் மற்றும் அமைப்புகளை விஸ்வல் மீடியாவிலிருந்து பெறமுடியும்.

### சத்தங்களை உணருதல்

கணிப்பொறிகளின் மூலமாக சிறந்த சென்சார் என்ற கருவி மூலமாக சத்தங்களில் உள்ள அழுத்தம், அதிர்வுகள் மற்றும் வெவ்வேறு அலைகளை உணரமுடியும். கணிப்பொறிகள் சுற்றுப்புறத்தை மிகத்துல்லியமாக கண்காணிக்கும்.

சாதாரண சத்தங்களை மனிதனால் எப்படி உணர முடிகிறதோ அதேபோல் இந்த சென்சார்களும் உணர்ந்துகொள்ளும். புதிய சத்தங்கள் எதுவும் தென்பட்டால் அது பழைய ஒலி வடிவங்களோடு ஒப்பிட்டு உணரும் தன்மைகொண்டது.

### கணிப்பொறிகளால் சுவைக்க முடியும்

IBM வல்லுனர்கள் உருவாக்கிகொண்டிருக்கும் கணினியானது சுவையை அறியக்கூடிய வகையிலானது. இது சமையல் வல்லுனர்களால் உருவாக்கப்படும் உணவுகளையும் சுவைக்கக்கூடியது மற்றும் அந்தந்த உணவுகளில் உள்ள பகுதிப்பொருட்களை வகைப் படுத்தக்கூடியது.

இதுபோன்ற கணினிகள் நமக்கு சிறந்த மற்றும் தரமான உணவுப்பொருட்களை அடையாளம் காட்டப் பயன்படுகிறது.

இந்த கணினிகள் இதற்காக சில வரைமுறைகளைக் கொண்ட மென்பொருள்களால் வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்த மென்பொருள்கள் எந்த உணவில் எவ்வளவு மற்றும் எந்த வகையான பொருள் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை கண்டறியும் வகையில் எழுதப்பட்டிருக்கும்.

### நுகரும் வகையிலான கணினிகள்

இன்னும் ஐந்து வருடங்களில் கணிப்பொறிகளால் எளிதில் நுகர முடியும். மேலும் கணிப்பொறி மற்றும் செல்போன்களில் இணைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான சென்சார்கள் உங்களுக்கு சளிப்பிடித்துள்ளதா இல்லை வேறெதாவது உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட் டுள்ளீர்களா என்பதைக்கூட கண்டறிந்துவிடும்.


# கணனிகளைத் தாக்கும் கேமரூ

பிரபலமான ஹோட்டல்களின் பெயர்களில் மின்னஞ்சல்களை அனுப்பி, அதில் தரப்பட்டிருக்கும் லிங்க் மூலம், கம்ப்யூட்டர் களைத் தாக்கும் கேமரூ எனப்படும் மால்வேர் இந்தியாவில் 1.89 வீதக் கணனிகளில் பரவி உள்ளதாக ட்ரெண்ட் மைக்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால், அதிக அளவில் பயணங்களை மேற்கொள்பவர்கள், தங்கள் மெயில் லிஸ்ட்டில் இந்த மால்வேர் கொண்ட அஞ்சல் செய்திகளுக்கு பலியாகிறார்கள். இந்த மால்வேர், அஞ்சல்களில் உள்ள, தனி நபர் தகவல்களைத் திருடி அனுப்புகிறது. இந்த மால்வேர் BKDR_ANDROM.P என்ற பைல் பெயரில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் புகைக்குண்டு மூலம் கருத்துக்களை நசுக்க முடியாது

## கருஜயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

நீதிமன்றம் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜய சூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக நீதிமன்றின் மீது பிரயோகிக்கப்பட்டுவரும் அழுத்தங்கள் தொடர்பில் சர்வதேச அமைப்புக்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

கண்ணீர்ப் புகைக்குண்டு, குண்டாந்தடிகளின் மூலம் பொது மக்களின் கருத்துக்களை நசுக்கிவிட முடியாது. எனவே அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நியாயமான முறையில் பயன்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

அண்மையில் நடைபெற்ற மோட்டார் கார் பந்தயப் போட்டி பொது மக்கள் பணத்தை விரயமாக்கும் ஓர் நிகழ்வாகவே கருதப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புனித அந்தோனியார் கூ. சங்க திறப்பு விழா

யாழ்ப்பாணம் பாஷையூரில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மேற்படி கட்டடத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் தெரிவிக்கையில், கடற்தொழிலை எதிர்காலத்தில் நவீனப்படுத்தி அதனூடாக வேலைவாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் மக்களுடைய தேவைகளை நாம் முடிந்தளவு சீர்செய்து வருகின்றோம். மக்கள் சரியானதும் தெளிவானதுமான அரசியலை தெரிவு செய்கின்ற போது அதன் மூலம் பல்வேறு அபிவிருத்திகளை எட்ட முடியும். கடந்த காலங்களில் இருந்து வந்த தொழிற்தடைகள் நீக்கப்பட்டு கடற்தொழிலாளர்கள் தற்போது எல்லையற்ற, நேரமற்ற தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில் இதனை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும். அத்துடன் பாசையூர் கடற்கரையில் அமைந்துள்ள சன சமூக நிலையக் கட்டடத்தில் நிலை கொண்டுள்ள படையினரை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-6)

# புதுக்குடியிருப்பில் நடமாடும் சேவை

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், யு.என்.டி.பி., புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 9 மணிதொடக்கம் பிற்பகல் 4மணிவரை புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் மாணிக்கபுரம், தேராவில், வள்ளுவர்புரம், விசுவமடு கிழக்கு, விசுவமடு மேற்கு, சுதந்திரபுரம், தேவிபுரம், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு வடக்கு, வள்ளிபுனம், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு, மந்துவில், புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, சிவநகர், இரணைப்பாலை, கோம்பாவில், மன்னாங்கண்டல் ஆகிய கிராமமக்களின் நன்மைகருதியே நடத்தப்படவுள்ளது.

பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்களை பெறல், காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமண பதிவு செய்தல், தேசிய அடையாள அட்டை முதியோர்ஆள் அடையாள அட்டை பெறும் சேவை ,பொலிஸ் பதிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. இதற்கான புகைப்படம் எடுத்தல், முத்திரை, கடிதஉறை என்பன இலவசமாக பெறமுடியும் எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (அ-3-267)

# வெள்ளத்தை அடுத்து சிலாபம் வைத்தியசாலை நோயாளர்கள் இடப்பெயர்வு

சிலாபம் பிரதான வைத்தியசாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை தொடர்ந்து அவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சுமார் 300 நோயாளர்களை ஏனைய வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாரவில, ராகம, கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கே இந்நோயாளர்களை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தெதுறு ஓயாவும் முன்னேஸ்வரம் குளமும் பெருக்கெடுத்துள்ளதையடுத்தே வெள்ளநீர் சிலாபம் வைத்தியசாலையினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்துள்ளது. அனைத்து வீடுகளிலும் சுமார் 2 அடி உயரத்தில் வெள்ளநீர் நிறைந்து காணப்படுகின்றது.

சிலாபம் வைத்தியசாலையின் கீழ் மாடியிலிருந்த அனைத்து நோயாளிகளும் மேல்மாடிக்கு மாற்றப்பட்டனர். இரத்தவங்கி மற்றும் மருந்துக் களஞ்சியசாலைகளையும் பாதுகாக்கும் பணியில் வைத்தியசாலை ஊழியர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வைத்தியசாலையின் அதிகாரிகள் கூறியுள்ளனர். இதேவேளை வைத்தியசாலைக்கான மின்விநியோகமும் தடைப்பட்டுள்ளது. (அ-2)


# கரைச்சி பிரதேசசபை கிளிநொச்சி

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2013

சபையானது 2013ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை எமது அலுவலகத்தில் 1000 ரூபாவை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 31.12.2012 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### தொகுதிகள்

தொகுதி "A" – பொருட்கள் வழங்குதல்( பொது)
தொகுதி "B" – பொருட்கள் வழங்குதல்( மருத்துவம்)
தொகுதி "C" – சேவைகள்/வேலை
தொகுதி "D" – வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல்( பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு) |
| A - 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் நீர்க்குழாய் பைப்புக்கள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் மணல் கல், தீராந்தி சலாகை உட்பட |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் , அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்சாரப் பல்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் , ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம் ஹார்பிக், மற்றும் கிருமி நாசினிகள், ஏனையவை |
| A - 10 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம், சப்பாத்துக்கள் |
| A - 12 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள். |

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல்( மருத்துவம்) |
|---|---|
| B – 01 | சித்த மருத்துவ மருந்துகள் |
| B – 01 | Medical/ Equipments |

| தொகுதி இல | சேவைகள் விபரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, தொலைநகல், நிழல்படப் பிரதி இயந்திரம்) |
| C - 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| C - 04 | பதிப்பக வேலை – சகல வித படிவங்கள், ஏனையவை |
| C - 05 | கட்டட திருத்த வேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல் |
| C - 06 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| C - 07 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்(பெக்கோ, மோட்டர் கிரேடர், ரோலர், JCB) |
| C - 08 | கழிவகற்றல் சேவை |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D - 01 | சகல விதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு |

### நிபந்தனைகள்:

01. வழங்கல்கள் / சேவைகள் 2013 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு/செயலாளருக்கு உண்டு.
03. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு/செயலாளருக்கு உண்டு.

### பட வரைஞர்களை பதிவு செய்தல்

சபையானது 2013 ஆம் ஆண்டுக்கான பட வரைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

பதிவினை மேற்கொள்ளுவதற்கு ரூபா 1500.00 இனைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முன்னர் பதிவினை மேற்கொண்டவர்களும் 15.01.2013 ஆம் திகதிக்கு முன் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

### நிபந்தனைகள்:

1. கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.
2. பின்வரும் ஆவணங்கள் இணைத்தல் வேண்டும்.
   - வதிவிடச் சான்றிதழ்
   - படவரைஞருக்குரிய தொழில் தகைமைச் சான்றிதழ்
   - கல்வித் தகைமைச் சான்றிதழ்
   - அடையாள அட்டை நிழற்படப் பிரதி

( இவற்றின் மூலப்பிரதிகளுடன் புகைப்படப் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

தவிசாளர்/செயலாளர்,
கரைச்சி பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி-1822)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் சமகாலம் பற்றி....

### டிசெம்பர் 21 வசந்த காலத்தின் ஆரம்பம்...

இவ்வருடம் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதியை எல்லோரும் எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்றனர். அத்தினத்துக்கு அப்படி என்ன முக்கியத்துவம்? மாயன் கலண்டரின் அடிப்படையில் உலகின் இறுதி நாள் என்ற விளங்கா விளக்கமே அது.

இது தொடர்பாக இளையத்தளங்கள், பத்திரிகைகள் பல்வேறு கோணங்களில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றன. மதமாற்றம் செய்வோர் தங்கள் குறிக்கோளை அடைய இதை துருப்புச் சீட்டாக பயன்படுத்துகின்றனர். வானியலாளர்கள் வானத்தில் நிகழும் நிகழ்வுகளை தங்கள் அறிவுக்கேற்ற வகையில் ஆற்றலுக்கேற்ற வகையில் பலவாறு எடுத்தியம்புகின்றனர்.

மாயனின் கலண்டரைப் பற்றி எடுத்தியம்பும் முன்னர் சாதாரண ஒரு கலண்டரைப் பற்றி பார்ப்போம். மாதம், வருடம், கலண்டர் இவையாவும் யாவருக்கும் பொதுவானதாக இருக்கச் சந்தர்ப்பம் இல்லை. வெவ்வேறு வானியல் நிகழ்வுகளின் அடிப்படையில் மாதங்கள், வருடங்களுக்கான வரைவிலக்கணங்கள் வேறுபடுகின்றன. உதாரணமாக நமது வழக்கிலுள்ள பஞ்சாங்கங்கள், சந்திர மாதம், சூரிய மாதம், முஸ்லிம் மாதம், ஆங்கில மாதம் என மாதங்களையும் சூரிய வருடம், சாயன வருடம், சந்திர வருடம், ஆங்கில வருடம் என வருடங்களையும் மனித குலத்தின் தேவை கருதி வகுத்துள்ளதைக் காணலாம்.

மாயனின் கலண்டரின் பிரகாரம் பிரபஞ்சத்தின் சுற்று கிட்டத்தட்ட 26 ஆயிரம் வருடங்கள் என குறிப்பிடப்பட்டிருக்கின்றதாம். துல்லியமான கணிப்பின்படி மாயன் சரியாகவே இதைக் கணித்துள்ளான் என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது. பூமி தன்னைத் தான் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருவது மட்டும்தான் அநேகமானோருக்குத் தெரியும். ஆனால், பூமியின் சுழற்சியின் போது பூமி சுற்றும் திசைக்கு எதிர்த்திசையாக பூமியின் அச்சுச் சுழல்கின்றது. இந்தச் சுழற்சியால் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் கதிபேதம் 50 செக்கன்களாகும். இவ்வாறு பூமியின் அச்சுச் சுழற்சியால் ஏற்படும் மாற்றத்தை முந்துகை அல்லது முன் நிகழ்ச்சி (The Precessional Movement of the Earth) என அழைக்கின்றோம். அயனாம்சம் எனவும் இதுவே குறிப்பிடப்படுகின்றது. இச்சுழற்சிக்கு வருடமொன்று 50 செக்கன் வீதமாக ஒரு பாகையைக் கடக்க 72 வருடங்களும் 360 பாகையைக் கடந்து சுற்று பூரணமடைய 25ஆயிரத்து 920 வருடங்களும் செல்கிறது.

இம்முந்துகையால் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. 72 வருடங்களில் ஏற்படும் ஒரு பாகை மாற்றம் காலநிலையில் ஒருநாள் வித்தியாசத்தைக் காட்டும். 13ஆயிரம் வருடங்களில் தற்போதைய கோடை காலம் மாரி காலமாகவும் மாரிகாலம் கோடை காலமாகவும் மாறிவிடும். அதாவது பருவ காலம் மாற்றமடையும். மாயனின் கலண்டர் பருவ காலத்துடன் சம்பந்தப்பட்டதாகவே உள்ளது. அப்படியாயின் டிசெம்பர் 21ஆம் திகதியுடன் மாயனின் கலண்டர் முடிவடையக் காரணம் என்ன? பூமியின் அச்சுச் சுழற்சியால் ஏற்படும் முந்துகை (Precession)யின் காரணமாகவே பருவகாலங்கள் மாற்றமடைகின்றன.

தமிழ் மாதப்படி தட்சணாயம் ஆரம்பமாவது அதாவது சூரியன் தெற்கு நோக்கிப் போவது ஆடிப்பிறப்பன்று (ஜூலை 15) எனவும் உத்தராயணம் ஆரம்பமாவது அதாவது சூரியன் வடக்கு நோக்கிப் போவது தை மாதப் பிறப்பன்று (ஜனவரி 14) என நம்மவர் குறிப்பிட்டாலும் முந்துகையின் விளைவாக 23 நாட்களுக்கு முன்பதாகவே இச்செயற்பாடு ஆரம்பமாகின்றது. சூரியன் தெற்கு நோக்கிப் போவது (கடகக் கோட்டில் உச்சம் கொடுப்பது) ஜூன் 20இலும் வடக்கு நோக்கிப் போவது (மகரக் கோட்டில் உச்சம் கொடுப்பது) டிசெம்பர் 21 இலும் நிகழும் வானியல் காட்சியாகும். டிசெம்பர் 21இல் இளவேனில் (Spring) எனப்படும் வசந்தகாலம் ஆரம்பமாகின்றது. இது பருவகால அடிப்படையில் மாயனின் வருட இறுதியும் புதுவருட ஆரம்பமுமாகும். இதன் பின்னர் மாயனின் கலண்டர் ஏன் தொடரவில்லை? நியாயமான கேள்வி தான். பிறந்த குழந்தை ஒன்றுக்கு ஜாதக பலன் எழுதும்போது மகாதிசை புத்தி அடிப்படையில் பலன் எழுதப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குப் பின் பலன் எழுதப்படுவதில்லை. இதனைக் கருத்தில் எடுத்து சாதகரின் ஆயுள் இத்துடன் முடிவு பெறுகின்றது எனக் கூற முடியாது. இதைப்போன்றதே மாயனின் கலண்டரும். ஆனால், டிசெம்பர் 21இல் இளவேனில் எனப்படும் வசந்தகாலம் ஆரம்பமாகின்றது என்பது மாயனின் வியக்க வைக்கும் விலாசமான அறிவு.

தோன்றல், திரிதல், கெடுதல் என்ற நிலையில் தோன்றிய இவ்வுலகம் மாற்றங்களுக்குள்ளாகி என்றோ ஒரு நாள் அழியும். ஆனால், அது எப்போ என்பது விடுவிக்கப்பட முடியாத புதிர்.

**காலங்களில் அவள் வசந்தம் மாதங்களில் அவள் மார்கழி...** எனப் பாடிய கவிஞனின் வரிகளுடன் டிசெம்பர் 21 இல் மார்கழி மாத வசந்த காலத்தில் அடி எடுத்து வைப்போம்.

**சி.இரத்தினவடிவேல்**
**120, இராசாவின் தோட்டவீதி,**
**யாழ்ப்பாணம்.**

★ ★ ★

### பல்லாயிரம் ஆண்டுகள் உலகம் வாழும்

தற்போது கலியுகம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் 5113 வருடங்கள் முடிவடைந்து விட்டன. தற்போது 5114ஆம் வருடம் நடந்து கொண்டிருக்கிறது. கலியுகம் முடிவடைவதற்கு இன்னும் 426886 வருடங்கள் உள்ளன. கலியுகம் முடியும்வரை மனித இனம் வாழும் என்பது வாக்கிய சோதிட உண்மையாகும். கலியுகம் 432000 வருடங்களாகும். முதலில் கிருத யுகம் நடந்தது.

இதில் 1728000 வருடங்கள் அமைந்தன. அடுத்து திரேதா யுகம் 1296000 வருடங்கள் நடந்தன. திரேதா யுகத்தில் இராமாயணப் போர்கள் நடந்தன. இதில் இராவணேஸ்வரன் வாழ்ந்தான். அடுத்து நிகழ்ந்த துவாபர யுகத்தில் 864000 வருடங்கள் அமைந்தன. துவாபர யுகத்தில் பாரதப் போர்கள் நடந்தன. ஆகையால் சோதிடப்படி 21.12.2012இல் எந்த யுக மாற்றமுமில்லை. ஆகையால் நாம் வாழும் உலகம் அழியாது.

**சோதிடஞானி சண் மாஸ்ரர்**
**(தலைவர்) தமிழர் சோதிட**
**ஆராய்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.**

★ ★ ★

### உலக அழிவு உண்மையா?

அண்மைக் காலத்தில் உலக அழிவு பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. இச் செய்தியின் விளைவுகளோ பாரதூரமானவை. மனச்சோர்வு, முயற்சியின்மை, தூக்கமின்மை, தற்கொலை முயற்சிகள், விரக்திமனப்பான்மை இன்னும் பல தொடர்ந்தே விபரிக்கலாம்.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர் டேவிட் மொறிசன் இதுபற்றி விஞ்ஞான ரீதியான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

முதலாவது மார்கழி 21, 2012 உலகழிவாகக் கருதப்பட்டது. மாயன் கலண்டரின் தவறான கணிப்பாகும்.

அடுத்ததாக சுமேரியர் எனப்படும் மத்திய தரை நாட்டவர் நிபுறு என்னும் திருட்டுக்கோள் (Niburu Rogue Planet) பூமியை நோக்கி பயணம் செய்து 2012 டிசெம்பர் 21 இல் பூமியில் விழுந்து அதை அழித்தொழித்து விடும் என்னும் நம்பிக்கையை கொண்டிருந்தார்களாம் என்று சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு செய்தியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்? அசர்பஜானிய நாட்டவரான சக்கரியா சிற்சின் என்னும் எழுத்தாளர் 1976இல் வெளியிட்டுள்ள ஒரு நூலாகும். இவர் உலக அழிவு பற்றிய இச் செய்தியை சுமேரியருடைய ஆவணங்களிலிருந்து மொழி பெயர்த்துள்ளதாக தன் நூலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அந்த நூலாசிரியர் 2010இல் காலமாகிவிட்டார்.

ஆகவே, உண்மையென்ன? நிபுறு என்னும் கோள் பூமியை நோக்கி வருமானால் அமெரிக்க விண்வெளி அராய்ச்சி நிலையம் நாசா (NASA) தனது நுட்பம் வாய்ந்த தூர நோக்கு கருவிகளினால் இனம் கண்டு கடந்த பத்தாண்டு காலமாக இதுபற்றிய தகவல்களை வெளியிட்டு வந்திருக்க வேண்டும். அப்படியான ஒரு கோள் இனம் காணப்படவில்லை என்பதே உண்மை.

ஆகவே, ஆதாரமற்ற வதந்திகளினால் வீண் பீதியையும் ஐயப்பாட்டையும் உருவாக்குவதில் எவ்வித அர்த்தமுமில்லை.

தழுவல் Sunday Times 02.12.2012

**அருட்தந்தை ஜே.திருட்செல்வம்**

★ ★ ★

### இயற்கை அனர்த்தம் பற்றிய எதிர்வுகூறல்

✴ இலங்கையில் இவ்வாண்டு ஏற்பட்ட ஒவ்வொரு நில அதிர்வும் இயற்கையானது என எனது ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அந்த வகையில் 28.12.2012 முதல் 03.01.2013 வரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் நில அதிர்வு உணரப்பட வாய்ப்புண்டு. இதற்கமைவான துல்லியப்படுத்தப்பட்ட இரு நாட்கள் (31.12.2012, 01.01.2013)

மீண்டும் ஜனவரி மாத இறுதிக்குள் நான்கு நில அதிர்வுகள் வெளிப்பட வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. இவை பற்றி மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

✴ 28.12.2012 முதல் 05.01.2013 வரையான காலப்பகுதிக்குள் புவியின் எந்தவொரு பகுதியிலாவது பாரிய நில அதிர்வு இடம்பெறலாம். துல்லியப்படுத்தப்பட்ட இரு நாட்கள் (31.12.2012, 01.12.2013)

✴ 30.12.2012 முதல் 05.01.2013 வரையான காலப்பகுதிகளுக்குள் புவியின் எந்தவொரு பகுதியிலாவது பாரிய எரிமலை வெடிப்பு நிகழலாம்.

✴ 08.01.2013 முதல் 12.01.201[illegible] வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் வட கிழக்குப் பருவ மழை தீவிரம் அடைந்து அதிகப்படியான மழை வீழ்ச்சியைத் தரலாம். இக்காலப்பகுதியில் குளங்களுக்கு நீரேந்து பிரதேசங்களில் இருந்து நீர் வரத்து அதிகமானதாக இருக்கும். அதனால் வடகிழக்கு பிரதேசத்திலுள்ள குளங்களில் உள்ள மேலதிக நீரையும் அதற்கு மேலாகவும் வெளியேற்றி தயார் நிலையில் இருக்க வேண்டும். சில வேளைகளில் அனர்த்த நிலை ஏற்பட்டால் அதற்கான தற்காப்பு உபாயங்களை கையாளுதல் வேண்டும்.

**வி.கணேசமூர்த்தி,**
**விசுவமடு.**

---

# ஷிராணியிடம் ஜனாதிபதி மன்னிப்பு கேட்கவேண்டும்

## விக்கிரமபாகு கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரத்தால் உள்நாட்டு சர்வதேச அழுத்தங்கள் நெருக்கடிகளில் அரசு சிக்கியுள்ளதால் ஷிராணி பண்டாரநாயக்கவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னிப்புக் கேட்டு இந்தப் பிரச்சினையை முடிபுக்குக் கொண்டுவர வேண்டும் என அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, இந்த விடயத்தை இனிமேலும் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று நவசமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அசாத் சாலி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டவரையறைக்குட்பட்ட சமூகம் தான் பிரதம நீதியரசர் பதவியில் இருக்க வேண்டுமா இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இன்று அந்தச் சமூகத்தில் 99 சதவீதமானோர் அவருக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கின்றனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை சுயாதீனக் குழுவினூடாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அரசமைப்புக்கு எதிரான முறையிலேயே பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டு வரவேண்டுமெனில் அதற்கோர் நடைமுறை இருக்கிறது.

இதுபோன்றதொரு பிரேரணையை சட்ட வரையறைக்குட்பட்ட சமூகம்தான் கொண்டு வரவேண்டும். அவரின் விவகாரங்களை விசாரணை செய்ய வேண்டிய தேவை இல்லை.

அவர் தமது கடமையிலிருந்து தவறியிருந்தாரெனில் பதவி விலகலாம். அதற்கான ஏற்பாடுகளை சட்டவரையறைக்குட் பட்ட சமூகம் மேற்கொள்ளலாம் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம் பெயர்ந்திட ஓர் அடி போதும்
பரம் சுடரே வழிகாட்டு.
- ஓர் கவிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உலகம் அழிவதும் நிலைப்பதும் மக்களிடமா? மாயன் கலண்டரிடமா?

உலகம் அழியப் போகின்றது என்ற செய்தியால் ஒருபகுதி மக்கள் பயத்தில் உறைந்து போயுள்ளனர்.

இன்னொரு சாராருக்கு உலக அழிவு பற்றிய கதை நாவுக்கு சுவையாகிவிட்டது.

இவர்கள் தவிர மற்றொரு சாரார் உலக அழிவுபற்றிய கதையாடலைக்கூட அறியாதவர்களாக இருக்கின்றனர்.

எதுவாயினும் உலக அழிவு என்ற செய்தி பரவுகின்ற வேகத்திற்கு உசார் கொடுப்பதுபோல, உலகின் சில பாகங்களில் நடந்துவரும் இயற்கையின் சீற்றம் –காலநிலை மாற்றம் அமைந்துள்ளது.

இயற்கையின் சீற்றத்தை இந்த உலகம் காலத்திற்கு காலம் அனுபவித்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

முதல் சங்க காலத்தில் தமிழர்களின் வாழ்விடமாகக் கருதப்பட்ட லெமூரியா என்ற குமரிக் கண்டம் கடல்கோள் அனர்த்தத்தில் அழிந்து போனது என்பது வரலாற்று உண்மை.

அதேநேரம் கம்சன் என்ற கொடியவனிடம் இருந்து குழந்தை கிருஷ்ணனை காப்பாற்ற தந்தை வசுதேவர் குழந்தையைப் பிரப்பம் கூடையில் வைத்து தலையில் சுமந்து செல்கிறார்.

நேரம் இரவுப் பொழுது. யமுனை ஆற்றைக் கடந்தால் மட்டுமே கம்சனிடம் இருந்து கிருஷ்ண பாலகனைக் காப்பாற்ற முடியும்.

ஆனால் ஆற்றைக் கடப்பதென்பது இயலாத காரியம்.

வசுதேவர் ஆற்றங்கரைக்கு வருகின்றார். ஆறு தானாகவே இடம்விட்டுக் கொடுக்கின்றது என்ற புராணக் கதையையும் நாங்கள் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

இதுமட்டுமல்ல, வைகை நதியை பெருக்கெடுக்க வைத்து பிட்டுக்கு மண் சுமந்த கதையும்,

உலகிற்கு தர்மத்தை போதித்த புத்தபிரானின் போதனைகளும்,

உன்னைப்போல் பிறரையும் நேசி என்றுரைத்து மற்றவர்களின் பாவத்தை சுமந்த யேசுபிரானின் வழிகாட்டலும்,

இமைப் பொழுதும் இறை நாமத்தை சிந்திக்கத் தவறாதே என்ற நபிகள் நாயகத்தின் அருளுரையும் மக்கள் சமூகத்திற்கு உணர்த்துவது; தர்மம், அன்பு, ஈகை, பண்பு, பணிவு, சாந்தி, சமாதானம், இரக்கம் என்பன நிறைந்த மனிதர்களாகஒவ்வொருவரும்வாழவேண்டும்என்பதாகும்.

எனினும் நாம் அப்படி வாழ்கின்றோமா? என்று ஒருகணம் எங்களைக் கேட்டால் உண்மை தெரியவரும்.

இறைவன் இல்லையென்று சொல்பவர்கள் கூட, இயற்கையை விஞ்சிய அற்புதப் படைப்பு எதுவும் இல்லையென்பதால் இயற்கையையேனும் இறைவனாக வழிபட வேண்டும்.

இறைவன்–இயற்கை–இவை இரண்டில் எதை எடுத்துக் கொண்டாலும் இறைவனுக்கும் இயற்கைக்கும் சீற்றம் தரக்கூடிய வகையில் நாம் நடந்துகொள்ளாதவரை இந்த உலகம் ஒருபோதும் அழியாது.

மாறாக இனத்தால்; மதத்தால்; மொழியால்; நிறத்தால்; உழைப்பால்; மூலதனத்தால்; சமூகப் பிரிப்பால் மனித உயிர்களைப் பாகுபடுத்தி படாப்பாடுபடுத்தி தாம் மட்டும் வாழ நினைத்தால் அதற்கு இறைவனும் இயற்கையும் ஒருபோதும் இடம்கொடுக்காது என்பதுதான் எங்கள் நிறுத்திட்டமான முடிபு.

உலகம் அழிவதும் நீண்டு நிலைப்பதும் மக்களிடமே இருக்கிறது. அது மாயன் கலண்டரிடம் அல்ல என்பதை இனிமேலாவது இந்த உலகம் உணர்ந்து கொள்ளட்டும்.

## விஜயதாச ராஜபக்ஷவின் இல்லத்திற்கு அருகாமையில் துப்பாக்கிச் சூடு
### நலம் விசாரிக்க சென்றார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான விஜயதாச ராஜபக்ஷவின் இல்லத்திற்கு அருகாமையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் நேற்று அதிகாலை 12.20 மணியளவில் கேட்டுள்ளது. விஜயதாச ராஜபக்ஷவின் கனிஷ்ட புதல்வர் இந்த சத்தத்தை கேட்டதாகவும் சத்தம் கேட்டு சில நிமிடங்களில் கார் ஒன்று புறப்பட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இல்லத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் வெற்றுத் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனையடுத்து அவரது வீட்டுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அதிகாலை மூன்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று அவரது வீட்டிற்குச் சென்ற ஜனாதிபதி அவரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (அ-2)

## வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி போலி முகவர்கள் உலா வருகின்றனர்
### மக்களே எச்சரிக்கையாக இருங்கள்!

(மல்லாவி)

போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பெண்களை இலக்குவைத்து வெளிநாட்டுக்கு இலவசமாக அனுப்புவதாகவும் கொழும்பில் ஆடைத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாகவும் கூறி கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சில போலி முகவர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாகவும் இவர்களிடம் ஏமாற வேண்டாம் எனவும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்களுக்கு அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளனர்.

அண்மையில் இச்செயற்பாடுகள் கிளிநொச்சி, மாங்குளம், பனிக்கன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சில உள்ளூர் முகவர்களால் நடைபெற்றுள்ளமை தெரியவருகின்றது. பெண் ஒருவரை ஒழுங்குசெய்துகொடுக்கும் உள்ளூர் முகவருக்கு 20ஆயிரம் முதல் 30ஆயிரம் வரை வழங்கப்படுகின்றது. இப்படி ஏமாற்று பேர்வழிகளிடம் ஏமாந்த பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது உழைப்பாளிகளை இழந்த பெண்களுக்கும் யுவதிகளுக்கும் கிளி, முல்லை மாவட்டங்களில் பல்வேறுபட்ட அரச, அரசசார்பற்ற பொது அமைப்புக்களினால் வாழ்வாதார உதவி, வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அரச அனுசரணையுடன் பாரிய ஆடைத்தொழிற்சாலை ஒன்று அறிவியல் நகரில் அமைக்கப்பட்டு வருவதால் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறாது உள்ளூரிலேயே குடும்பத்தவர்களுடன் இருந்துகொண்டு தொழில் வாய்ப்பை மேற்கொள்ளுமாறும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களை அணுகும் போலி முகவர்கள் பற்றி விழிப்பாக இருப்பதுடன் அவர்கள் பற்றிய தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கும்படியும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-3-15)

## அம்மா பகவானின் விசேட தரிசனம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஅம்மா பகவானிடமிருந்து நேரடியாக விழிப்புணர்விற்கான ஆசிகளைப் பெறுவதற்கும் தியானத்திற்குமான ஸ்ரீஅம்மா பகவானின் விசேட Webcast தரிசனம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இந்த தரிசன நிகழ்வானது நல்லூர் சட்டநாதர் கோவில் வீதி திவ்ய ஜீவண சங்க மண்டபத்திலும் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்திலும் நடைபெறவுள்ளது. (அ-9)

## வலுவூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இளைஞர் யுவதிகளை வலுவூட்டலும் தொழில் வாய்ப்புக்களும் தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இல 90, பாங்சால் வீதியில் அமைந்துள்ள மனிதநேய அமைப்பு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் NAITA நிறுவன தொழில்வழிகாட்டி அலுவலர் வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார். இளைஞர் யுவதிகளை கலந்து கொண்டு பயன்பெறுமாறு நிறுவன மாவட்ட அதிகாரி த.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பினர் மாதாமாதம் யாழ். மாவட்டத்தின் அவசிய தேவைகள் கருதிய மாதாந்த கலந்துரையாடல்களை அதி உயர்தர வளவாளர்களின் உதவியுடன் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9)




ஒருவருக்கு ஒன்றைக்கொடுப்பது கொடையெனப்படும். கொடை கொடுப்பவர் தமது கருணை உள்ளத்தால் மற்றவருடைய இன்றியமையாத தேவையை உணர்ந்து கொடையைக் கொடுப்பவர். உலக வாழ்வியலில் பாரியும் கர்ணனும் சிறந்த கொடை வள்ளல்களாகப் பேசப்படுகின்றனர். இவ்விரு கொடையாளிகளையும் விட மாரியே கொடையில் மிகச்சிறந்தது என்ற கருத்தும் உண்டு. ஆனால் மணிவாசகர் எமக்கெல்லாம் என்றும் கருணையோடு அருட்கொடை செய்யும் இறைவனையே மிகச்சிறந்த உயர்ந்த கொடையாளி எனச்சிறப்பாக உணர்த்தியுள்ளார். எமக்குத் தேவையானவற்றைத் தேவையான போது தருபவர் இறைவனே. ஆனால் அதை நாம் உணராமல் வாழ்கிறோம். மணிவாசகர் இக்கருணையை உணர்ந்தவர்.

அதனால் இறைவனுடைய திருக்கையை வளர்கின்ற நின் கருணைக் கை என்று பாடலடியிலே குறிப்பிட்டுள்ளார். கொடுக்கக்கொடுக்க வளர்கின்ற ஒரு கருணைக்கை. மணிவாசகர் இறைவனுடைய கருணையைத் தற்செயலாகப் பெற்றவர். மந்திரியாக வாழும் நிலையில் திடீரென இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். அந்த அனுபவத்தை எல்லோரும் பெறமுடியும் என நம்புகிறார். ஏனெனில் இறைவன் கருணையைப் பெற்றபின்பு அவர் அதை விட்டு நீங்கிவிட்டார். இப்போது மீண்டும் அதைப்பெறுவதற்கு முயற்சி செய்கிறார். அதற்குரிய வழியையும் தேடுகிறார்.

வழிபாட்டினாலே மீண்டும் இறைவன் கருணையைப் பெறலாம். இறைவன் திருக்கோலத்தை மனதில் இருத்தி வழிபடலாம். கோலத்தை ஒருமுறை கண்டவுடன் அது நினைவில் பதிந்துவிடும். வெண்மதிக்கொழுந்தொன்று ஒளிர்கின்ற நீள்முடியையுடைய சிவனின் திருக்கோலத்தை மணிவாசகர் நினைவில் வைத்திருக்கிறார். மூன்றாம் பிறைச்சந்திரனைத் திருமுடியிலே சூடிய சிவன் ஒளிவீசுகின்ற நீண்ட சடாமுடியையும் கொண்டவர். மதிக்கொழுந்து என்றதொடர் முற்றாத இளம்பிறையைக் குறித்து நிற்கிறது. சிவன் திருமுடியிலிருக்கும் பிறையைச் சுந்தரர் பிறைசூடி என்றே பாடியுள்ளார். சம்பந்தர் தூவெண்மதிசூடி என்று பாடியுள்ளார். ஆனால் மணிவாசகர் வெண்மதிக்கொழுந்து எனப் பாடியுள்ளார்.

உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்திலே உறைகின்ற சிவனின் தோற்றப்பொலிவினைப் பாடவந்த மணிவாசகர் சிறந்த பொன் மின்னுவது போல மின்னுகின்ற செழுஞ்சுடரெனக் குறிப்பிட்டுள்ளார். பொன் ஒளிருந்தன்மையது. அத்துடன் சிவந்த சுடரைப்போன்ற தோற்றம் எனக்கூறும் போது இறைவன் தோற்றத்தைக் காட்டுவதற்கு பொன்மட்டும் போதாது என்பதை உணர்த்திவிடுகிறார். எனவே இன்னொரு இயற்கைத் தோற்றத்தையும் இணைத்துக்காட்டியுள்ளார். அதுவே மின்னலின் தோற்றமாகும். சிவனின் திருமேனி பொன் ஒளிர்வது போலவும் மின்னல் ஒளிர்வதுபோலவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எல்லையற்ற பேரொளி படைத்த சிவனின் தோற்றத்தை நாம் காணவில்லை. ஆனால் அவர் கண்டுள்ளார். தாம் கண்டு அனுபவித்த அந்த அற்புதமான தோற்றத்தை நாம் உணரக்கூடியவகையிலே பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார். இயற்கையாக நாம் காணும் மின்னலின் ஒளிவீச்சும் பொன்னின் ஒ ளிவீச்சும் ஒன்றிணைந்த ஓர் அற்புதமான தோற்றம். அதனையே மணிவாசகர் செழுஞ்சுடரெனக் குறிப்பிட்டுள்ளார். முன்னோர்கள் இறையுருவங்களை வழிபடவில்லை. தமது ஆற்றலுக்கு மேற்பட்ட தம் ஆற்றலால் கட்டுப்படுத்தமுடியாத இயற்கையின் பேராற்றலையே வழிபட்டார்கள். அந்தவகையில் மணிவாசகரும் திருவுத்தரகோசமங்கை தலத்திலே உள்ள ஆற்றல் படைத்த அரசனாக இறைவனைக் காட்டுகிறார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

**வளர்கின்ற நின்கரு ணைக் கையில்**
**வாங்கவும் நீங்கியிப்பால்**
**மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய்**
**வெண்மதிக் கொழுந் தொன்று**
**ஒளிர்கின்ற நீள்முடி உத்தர**
**கோசமங் கைக்கரசே**
**தெளிகின்ற பொன்னுமின் னும் அன்ன**
**தோற்றச் செழுஞ்சுடரே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். இந்துவை வீழ்த்தி சென்.ஜோன் அபார வெற்றி

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையி லான சிநேகபூர்வமான ஒருநாள் கிரிக்கெட் போட்டி அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரு கல்லூரிகளின் 13 வயதுப் பிரிவு அணிக ளுக்கிடையில் இடம்பெற்ற இப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட யாழ். இந்துக்கல்லூாரி அணி 31 ஒவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.எந்தவொரு வீரரா லும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினரின் பந்து வீச்சை சமாளித்து நிலைத்து நின்று ஆட முடிய வில்லை. பந்து வீச்சில் செரோபன் 10 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் யதுசன் நான்கு ஓட்டங்களை விட்டுக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றின.

பதிலுக்கு 47 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான வெற்றி இவருடன் துடுப் பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் அவ் இலக்கினை 15 ஓவர்கள் நிறையில் ஒரு விக்கெட்டினை இழந்து பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக சுவிசன் 16 ஓட்டங்களையும் டனுசன் 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

## கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்

அல்லைப்பிட்டி டென்போஸ்கோ இளைஞர் கழ கத்தினால் கிறிஸ்மஸ் ஒளிவிழாவை முன்னிட்டு தீவகத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் 27 ஆம் திகதி அல்லப்பிட்டி கிரா மங்களில் இடம்பெறவுள்ளது.

இதில் காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் இதில் வெற்றியீட்டும் அணிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அன்றைய தினம் மாலை அல் லைப்பிட்டி டென்போஸ்கோ இளைஞர் கழக த்தில் திருமணம் செய்தவர்களுக்கும் திருமணம் செய்யாதவர்களுக்குமான கயிறு இழுத்தல் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான கிடுகு பின்னுதல், மாலை கட்டுதல் போன்ற போட்டிகள் நடத் தப்படவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். காற்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களின் 22 வயதுப் பிரிவினருக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று யாழ்ப்பாணம் துரையப்பா விள்ளயாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

11, 12, 13 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள மேற்படி காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 விளையாட்டுக்கழகங்களின் அணிகள் பங்கு பற்றவிருக்கின்றன என காற்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

# காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் யங்கென்றிஸ், சென்.அன்ரனிஸ் வெற்றி

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட் டுக்கழகம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 46 விளை யாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்திய காற் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழக அணியும் அன்ரனீஸ் விளை யாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

மேற்படி போட்டிகளின் காலிறுதிப் போட்டி யில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழக அணி யினை எதிர்த்து அண்ணா சிலையடி விளை யாட்டுக்கழக அணி மோதியது. மேற்படி போட்டியில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் நவஜீவன் விளை யாட்டுக்கழக அணியினை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. போட்டி முடியும்போது இரு அணிகளும் தலா ஒரு கோல்களினை போட்டனர். இதனால் போட்டி சமநிலை தவிர்ப்பு உதைக்கு கொண்டு செல்லப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் 3:0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

# கஞ்சதேவ ஞாபகார்த்த காற்பந்து; துறையூர் ஐயனார் வி.க.வெற்றி

வேலணை பிரதேச கடற்படையினரால் நடத்தப்பட்ட கஞ்சதேவ ஞாபகார்த்த காற் பந்தாட்டத்திற்கான விலகல் முறை சுற்றுப்போட்டி யில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த 7 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டம் முடியும்வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. இதனால் போட்டி சமநிலை தவிர்ப்பு உதை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் 3:1 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனா கியது.

# மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியன்





யாழ்ப்பாணம் காற்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட் டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.

குருநகர் பாடும்மீன் விளையாட் டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுரு கன் அணியினை எதிர்த்து நாவாந் துறை சென். நீக்கிலஸ் விளையாட் டுக்கழகம் மோதியது.

போட்டி ஆரம்பம் முதல் இரு அணி களும் ஆக்ரோஷமாக மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் போட முடியவில்லை. இரண் டாவது பாதி ஆட்டத்தின் 56 ஆவது நிமி டத்தில் ஞானமுருகன் அணி வீரர் ஜெகன் தாக்குதல் ஆட்டம் ஒன்றின் மூலம் அணிக்கு முதலாவது கோலி னைப் பெற்றுக் கொடுத்தார். இந்நிலை யில் ஞானமுருகன் அணியின் வெற்றி யினை மேலும் உறுதி செய்ய 474 ஆவது நிமிடத்தில் அவ்வணி வீரர் லஸ்ரில் ஒரு கோல் போட்டார்.

ஆட்டத்தின் கடைசி நிமிடமாகிய 80 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி க்கு ஒரு பெனால்டி வாய்ப்புக் கிடைக் கவே அதனை அவ்வணி வீரர் சேகர் கோல் ஆக்கினார். இறுதியில் ஞான முருகன் அணி 3:0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகி யது.

இச்சுற்றுப்போட்டியில் அதிக கோல் அடித்த வீரராகவும் சிறந்த வீரராகவும் சென். நீக்கிலஸ் வீரர் அமிலனும் சிறந்த கோல் காப்பாள ராக ஞானமுருகன் அணியினைச் சேர் ந்த சயந்தனும் இறுதிப் போட்டியின் சிறந்த வீரராக மயிலங்காடு ஞான முருகன் அணியினைச் சேர்ந்த ஜெக தீஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைமையை...

கவனம் செலுத்தியது.

வன்னியின் கிழக்குப் பகுதியில் தரைப் போர் நடவடிக்கைகள் தீவிரமாக நடந்து கொண்டிருந்த போது, அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடம் நிபுணர்கள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பியது.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களை மீட்பதற்கான வழிகள் மற்றும் ஏற்பாடுகளை ஆராய்வதற்கே அவர்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பசுபிக் கட்டளைப் பீடத்தின் சிறப்பு விமானம் பண்டாரநாயக்க அனைத்துலக விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சில மணி நேரம் முன்னதாகவே, அப்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவிடம், அப்போது அமெரிக்கத் தூதுவராக இருந்த றொபோட் ஓ பிளேக், இது குறித்து எச்சரித்திருந்தார் என்றும் சாமிந்ர பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ந-11)

## வைத்திய நிபு...

கானவர் ஆவார்.

மேற்படி வைத்திய நிபுணர் நேற்றிரவு 9 மணியளவில் பலாலி வீதி வழியாக தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்துள்ளார். கந்தர்மடம் சந்திக்கும் கெற்றபோல் சந்திக்கும் இடையில் அவரைப் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத சிலர் திடீரென வைத்திய நிபுணர் மீது வாள் வீச்சு நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இதில் அவரது இடது கை பலத்த காயத்திற்குள்ளாகியுள்ளது.

படுகாயமடைந்த வைத்திய நிபுணர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உள்ளானார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்திலும் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-11)

## புதிய தூது...

டனின் இலங்கைக்கான தூதுவராக ஹெரால்ட் சன்ட்பர்க், மொங்கோலியாவின் இலங்கைக்கான தூதுவராக சஞ்ஜாசுரேன் பயரா, ஆப்கானிஸ்தானின் இலங்கைக்கான தூதுவராக சய்டா மொஹமட் அப்டாலி மற்றும் பர்கினோ பசோவின் இலங்கைக்கான தூதுவராக இட்ரிஷ் ரவோயூ அவுட்ராகோ ஆகியோரே இவ்வாறு புதிதாக நியமனம் பெற்றவர்களாவர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை இவர்கள் தங்களது நியமனக்கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்தனர். இந்நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டார்.

இவர்கள் அனைவரும் இந்தியாவின் புதுடில்லி நகரில் அமைந்துள்ள தூதரகங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-110)

## மின்தடை...

மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச்சந்திவரையான பிரதேசம், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூர், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், பண்ணைப் பிரதேசம், மனோகரா பிரதேசம், யாழ். மாநகர சபைப் பிரதேசம், யாழ்.நகர் முழுவதும், வல்லிபுரப் பிரதேசம், புனிதநகர், கற்கோவளம், உபயகதிர்காமம், நெல்லண்டைப்பிரதேசம், பளை, மிருசுவில், எழுதுமட்டுவாள், கொடிகாமம், உசன், மந்துவில், வரணி, மீசாலை, புத்தூர் சந்தி, சாவகச்சேரிப் பிரதேசம், மட்டுவில், பாலாவி, வெல்லம்பொக்கட்டி, கைதடி, மறவன்புலோ, நாவற்குழி, கோகிலாக்கண்டி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## இலங்கையின்...

வினைச் சந்தித்து கலந்துரையாடினர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ரஜீவ் தெவாரி, கேணல் எஸ்.கே.ஆச்சர்யா, கேணல் எஸ்.சீ.தேவ்கன், கப்டன் ரஜீவ் மெத்தீவ்ஸ் மற்றும் இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோருடன் இலங்கை இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங், ஜனாதிபதிக்கு புத்தர் சிலையொன்றை அன்பளிப்புச் செய்ததுடன், இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் உறுதியளித்தார். (ந-11)

# யாழ்.பல்கலை மாணவர்...

இது குறித்து அவர் வெளியிட்டு கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பேச்சு சுதந்திரம், ஜனநாயக முறையில் அமைதிப் போராட்டம் நடத்துவதும் ஒன்று கூடுவதும் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களாகும்.

பல்கலைக்கழக மாணவர்களை தொடர்ந்து சிறையில் வைப்பது, துன்புறுத்தல், பயமுறுத்தல் ஆகியவற்றை யாரும் நியாயப்படுத்த முடியாது.

எனக்கும் எனது தொகுதி மக்களுக்கும் அண்மைக்காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமைக்கான சவால்கள் மிகுந்த துன்பத்தை அளிக்கின்றது.

இலங்கை அரசு இவ்விடயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

சென்ற மாதம் நமது வெளிநாட்டு அமைச்சர் ஜோன் பெயார்ட், இலங்கை அரசு நாட்டிலுள்ள மக்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என கனடா கேட்டுக்கொள்கின்றது என்று கடுமையாக கூறியிருந்தார்.

எமது பிரதமரும் நானும் எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இலங்கையில் இனங்களுக்கான உறவில் முன்னேற்றம் காண வேண்டும் என்றும், இடம்பெற்ற தவறுகளுக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும், மனித உரிமைகளை மதிக்க பழக வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கத் தவறமாட்டோம்.

அண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனது அனுதாபத்தையும் தெரிவித்து அவர்களுக்காக இறைவனிடமும் வேண்டுகின்றேன்.

பன்னாட்டு சமூகமும் இலங்கை அரசிடம் மனித உரிமைகளைப் பாதுகாக்க உத்தரவாதம் தர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றேன் என தனது அறிக்கையில் கோர்னேலியு சிசு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில் அண்மையில் கவலைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

## தெரிவுக்...

கள் குழு இவ்வாறு அறிவித்துள்ளது.

குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவையும் அதன் ஆய்வுகளையும் இரத்துச் செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கூடி தீர்ப்பை அறிவிப்பதாக நீதிபதிகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-11)


5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிவபாலன்



ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும் எம்மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே பேபி
எம்மையெல்லாம் துன்பக்கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா
உங்கள் பாலகன் நான் திருவரங்கன்
உங்கள் முகம் பார்க்கு முன்னே எங்குதான் சென்றீரோ!

மண்ணில் 27.07.1976
விண்ணில் 21.12.2007

ஐங்கரன் இல்லம்
தொல்புரம், வழக்கம்பரை

பிரிவால் துயருறும்
சி.தயாளினி (மனைவி)
சி.திருவரங்கன் (மகன்)
(சீ-1281)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்று உலகம் அழியும்



மாயன் நாட்காட்டியின்படி
இன்று காலை 9 மணிக்கு உலகம் அழியும்,
பிந்திய செய்தி என்பது பொய்.

ஆனால்
**A/L - 2015**
கலை, வர்த்தகப் பிரிவுகளுக்காக
**ஜனவரி 5 காலை 9 மணிக்கு**
நீங்கள் எங்களைச் சந்திப்பீர்கள்
என்பது மட்டும் மெய்.
**DMI**
Jaffna


# சீரற்ற காலநிலைக்கு...

மூழ்கியுள்ளன.

சிலாபம், பங்கதெனிய, மஹவெவ, மட்டக்களப்பு, அம்பலாந்தோட்டை ஆகிய நகரங்கள் நீரில் மூழ்கியிருந்தன. நாடளாவிய ரீதியில் உள்ள 72 பாரிய குளங்களில் 31 குளங்களில் நீர் வான் மட்டத்தை எட்டியுள்ளன.

அநுராத புரத்தில் பத்து பாரிய குளங்களின் வான் கதவுகளும் 41 நடுத்தரக் குளங்களின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

ஹம்பாந் தோட்டையில் 11 குளங்களின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. குரு நாகலையில் தெதுரு ஓயா உட்பட 5 குளங்களின் வான் கதவுகளும் மொனராகலையில் 3 குளங்களின் வான்கதவுகளும் புத்தளத்தில் மூன்று குளங்களின் வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன பராக்கிரம சமுத்திரத்தில் 8 வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

358 வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில் 1907 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

5 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 5231 குடும்பங்கள் 102 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்தமுகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை மக்களை பாதுகாப் பதற்கானஅனைத்துநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன்அவர்களுக்கு நிவாரணப் பொருட் களும் வழாங்கப்பட்டுள்ள தாக அனர்த்த முகாமைத்துவ நிலைய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ந-11)


புதிய முகவரி
## ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480



## ஆள்சேர்ப்பு

திசைகாட்டி குழுமத்தின் 'முத்துமணி காமன்ஸ்' நிறுவனத்திற்கு தையல்மெசின் இயக்குநர் (பயிலுநர்) சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

பொருளாதார வசதி குறைந்த ஓரளவு தையல் தெரிந்த 18-45 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கவும்.

யாழ்ப்பாணத்தில் வைத்தே பயிற்சி அளிக்கப்படும்.

எமது பிரதேச சமூக விழுமியங்கள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும்.

தொடர்பு: முகாமையாளர்
முத்துமணி காமன்ஸ் 0778418344
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(சி-1830)


# 5 கோரிக்கைகளை முன்வை...

வர்கள் 4 பேர் பயங்கர வாத குற்றத்தடுப்புப்பிரிவினரால்கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது விடுதலை உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இன்று காலை 7 மணி தொடக்கம்மாலை4.30 மணி வரை தந்தை செல்வா சதுக்கத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்த அடையாள உண்ணா விரதப் போராட்ட மானது யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதால் மதகுருமார்கள், புத்தி ஜீவிகள், அரசியல் கட்சிகள், பொது மக்கள் என பலரும் பங்கு கொண்டு ஆதரவு வழங்க வேண்டும் எனஅவர்கள்மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-6)


## வீடு விற்பனைக்கு
அச்சுவேலி சந்நிதி வீதியில்
சகல வசதிகளும் கொண்ட
மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
0777242025
(1198)



## வேலை வாய்ப்பு நீங்கள் தயாரா?



யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உலகளாவிய ரீதியில் தன் கிளைகளைப் பரப்பிப் பெருமை பெறும் DMI கனேடியன் நிறுவனம் சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு சாதாரண கல்வித் தகைமையுடன் சாதனை படைக்க
ஓர் அரிய சந்தர்ப்பம்.
இருபாலாரும் இணையலாம்

- 6 மாத கால பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கவர்ச்சிகரமான சம்பளத்துடன் பயிற்சி முடிவில் அடிப்படை சம்பளமாக ரூ. 35,000/- பெறமுடியும்.
- முந்தும் 25 பேருக்கு முதலிடம் வழங்கப்படும்.
- தங்குமிட வசதி இலவசம்.

தொடர்புகளுக்கு: 077 6219536, 077 5574795, 075 2792175
(1197)


# பெற்றோர், பீடாதிபதிகளூ...

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மேலும் சில விரிவுரையாளர்கள் தாம் இச்சந்திப்பினைபுறக்கணிக்கப் போவதாகவும் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப் பட்டுள்ள மாணவர்களின் விடுதலையினை வலியுறுத்துவதற்காகவேதாம் இச்சந்திப்பு என ஏற்பாடு செய்துள்ளதாக பல்கலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதி விரிவுரையாளர்கள் கூறுகையில், இராணுவத்தினருடனான இச் சந்திப்பானது மாணவர்களின் கைதினை நியாயப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டே இராணு வத்தினால் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித் தனர்.

மேலும் இச்சந்திப்பில் ஊடகவியலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து இச் சந்திப்பில் கலந்து கொள்பவர்கள் தொடர்பில் இறுதியான முடிவு எடுக்கப் படவில்லை. எனினும் தான் கடிதம் மூலம் அனைவருக்கும் அறிவித்துள்ளதாகவும் யாழ்.பல் கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

மேலும் இராணுவத்தினருடனான இச் சந்திப்பு பல்கலை மாணவர்களின் விடுதலையை வலியுறுத் துமா? அல்லது பல்கலைமாணவர்களின் கைதினை நியாயப் படுத்துமா? என யாழ். பல்கலைக் கழக சமூகத்தினர் மத்தியில் கருத்து முரண்பாடு உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)


## வாழ்வக அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கண் பார்வையற்ற அல்லது சாதாரண எழுத்தை இயல்பாக வாசிக்க முடியாத அளவுக்குப் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 2240146 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ உடன் தொடர்புகொள்ளவும். அனுமதிபெறும் பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறைவிடம், கல்விச் செலவுகள், கல்விக்கான விசேட உபகரணங்கள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

தலைவர், வாழ்வகம்
(c-1823)



பிலாறஸ் நாட்டில்
மருத்துவம், பொறியியல்
A/L-3S போதுமானது
இலங்கையில் அங்கீகாரம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016
(சி-1830)





சிங்கப்பூர், மலேசியா
Student Visa
மாதாந்த வேதனத்துடன்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016
(சி-1830)





## இவ் வருடம் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்திற்கு...

இவ் வருடம் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி, உயர்தர வகுப்பு கணிதம், உயிரியல் துறையினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் செயலமர்வு

- எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.12.2012) அன்று
- யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
- காலை - 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.
- நுழைவுக் கட்டணம் ரூபா 200/= மட்டுமே.

THE NSA (வட மாகாண விஞ்ஞான சங்கம்) THE JSCB (யாழ்.மாவட்ட விஞ்ஞான கழகம்) கல்விப் பிரிவு இணைந்து நடத்தும் இச் செயலமர்வில்

- உயர்தர வகுப்பு அடிப்படை பௌதிகவியல், அடிப்படை இரசாயனவியல் பாடத்திற்கான இலவச கைந்நூல்கள் விநியோகிக்கப்பட இருப்பதாலும்,
- பாடத்திட்டத்தில் ஏற்பட்ட புதிய மாற்றங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட இருப்பதாலும்
- THE NSA இன் தொடரும் கல்வி சேவைகளில் பங்கு பற்றுவதற்கான போட்டிப் பரீட்சை இடம்பெற இருப்பதாலும்

ஆசன ஒதுக்கீடு மற்றும் இதர ஒருங்கமைத்தல் வசதிகளை கருத்திற் கொண்டு இவ்வருடம் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றி உயர்தர வகுப்புக்காக கணிதம், உயிரியல் துறையினை தெரிவு செய்யும் அனைத்து மாணவர்களும் 23.12.2012 அன்று காலை 9.15 மணிக்கு முன்பாக மண்டபத்திற்கு சமூமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

ஒருங்கமைப்பு உதவி: யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்கள் மருத்துவ பீடம், கொழும்பு, யாழ்ப்பாணம். பொறியியல் பீடம் பேராதனை, கொழும்பு.
(303)



## தேவை

யாழ். நகரில் இயங்கும் கட்டிடப் பொருள் விற்பனை நிறுவனத்திற்கு கணக்காளர், கணக்காய்வாளர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளோருக்கும், அரச நிறுவனங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விளம்பர இல. 104, வலம்புரி,
இல. 03, 2ஆவது ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
(C-1828)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org